M. 1803 Vol. III—No. 3.

OFFICE OF THE REGIS
19 NOV
MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின
பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தனக் கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 10, 12, 14,

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 14 முதல் 18 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 12, முதல் 20.

எங்களிடம் சேலம், மதுரை, கொரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் ௧. | குரோதன௵ ஐப்பசிமீ 1925 அக்டோபர் | இதழ் ௩.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	109
2.	முரசு	110
3.	பிறனில் விழைந்த பேதையர் கதையைத் திறம்பட வுரைத்த புலவர் கவிநலம் ...	111
4.	வாழ்வும் சோதனையும்	116
5.	கொடுங் காற்று	119
6.	பண்டை இந்தியாவில் போக்குவரவு சாதனங்கள்	127
7.	சிரிய தேமொழி மணிமலர்	133
8.	பண்டைத் தமிழரின் கைத்தொழிலும் வர்த்தகமும்	142
9.	ரேடியோவின் அதிசயங்கள்	146
10.	இந்தியாவின் பூர்வீகச் செல்வ நிலைமை ...	149
11.	கணிதமேதாவி ஸ்ரீமான் சோமேச சந்திரவசு	153
12.	பத்திராதிபர் குறிப்புகள்	154
13.	விவசாயப் பகுதி	157

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாத முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப்படமாட்டா. மானேஜர்.

உங்கள் புத்தகசாலை பூர்த்தியாகாது?

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட் டெழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3. தபாற் செலவு வேறு. சொற்பக் காபிகளே கைவசமுள்ளது.

முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓம்

லக்ஷ்மி துதி

தரையிற் புதைத்த பொருள் கரியாகத்
    தயங்கு நரும்
அரையிற் றரிக்கத் துணியு மிலா
    திங் கலை பவரும்
கரையற்ற துன்பக் கடலூ
    டமிழ்ந்து கலங்கு நரும்
திரையிற் பிறந் துயர் சீமாட்டி
    கண்ணருள் சேர்ந் திலரே.

ஆவணக் காப்பக நூலகம்
210354
சென் 600 008

முரசு

சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிர மாண்புறச் செய்வோம்.

தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனைத்திலு மொன்றாய்—எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்

தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தந்
திக்கை வணங்குந் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்.

யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவிலும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ள தெய்வ மொன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

வலிமை யுடையது தெய்வம்—நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம்
மெலிவு கண்டாலுங் குழந்தை—தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ?

தம்பி சற்றே மெலிவானால்—அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ?
செம்புக்குங் கொம்புக்கு மஞ்சி—மக்கள்
சிற்றடிமைப் படலாமோ?

அன்பென்று கொட்டு முரசே—அதில்
யார்க்கும் விடுதலை யுண்டு
பின்பு மனிதர்க ளெல்லாம்—கல்வி
பெற்றுப் பதம் பற்று வாழ்வார்.

பாரதி.

பிறனில் விழைந்த பேதையர் கதையைத் திறம்பட வுரைத்த புலவர் கவினலம்.

கையிகந்த காமத்தால் ஆ ணறங் கடந்த மகன் விரும்பாப்பெண்ணலம் வலிந்து நுகர்தலை அரக்க மணமென ஆரியர் கூறுவர். உண்டகள் மயக்கம் உறக்க மிவற்றிடை யோராதவர் நலம் கட்டுண்ணுதலும், கொண்டவரெனக் கொளப் பெண்டிரைப் பேதித்து கரவா லவர்நிறை கவர்ந்து களித்தலும் பைசாச மணமெனும் பரியாயப்பெயர் பெறும். "தாம் வீழ்வார்" மனங்குழைவித் திணக்க வொல்லா ஆடவர், அற்றஞ்சூழ்ந் தபகரிக்க, பெண்மைப் பெருநிதி யிழந்துழந்த பேதையர் கதை பகரும் புலவர் பல ராவர். கன்னியராய்க் காளையர் கைக்கோட்பட்டு மறுகிய அம்பையன்ன அபலையர் கதையும், வேண்டா வேட்கையை வெறுத்துயிர் விடுத்த வேதவதி போல்வார் விழுப்பெருங்கதையும் ஈண்டு நாங் கருதுவோ மல்லேம். மனையற மரபேற்று, "கற்பு மேம்படு காதல்" மடவார் இற் புகுந்து, அவர் புலம் நிலை தேடிக்கூடி, அப்பேதையர் பெண்மை நலம் கவர்ந்து தம்மாண்மையறங்கொன்ற கொடியார் விழையிருள் விளைவும், அவர் கைக்கோட்பட்ட ஏழையர் பால் அக்கொடியார் காமத்தீ சுடப் புடம் புகுந்தொளிரும் கற்பிழுக்கமும், சோகமும் துயரும் சுவைபடக் கவிப்பார், (கவிப்பார்—கவிபுனைவார்) ஒப்புயர்வில்லார், முப்பெரும் புலவ ருளர். அவர் தாம், வட மொழி முதற்கவி வான்மீகரும், கல்வியிற் பெரிய தமிழ்க்கம்பரும், திசைபுக ழாங்கிலச் சேப்பியரும் (Shakespere) ஆவர். இப்புலவர் தலைவர் புனைந்துள காப்பியங்களில், அரக்க மணத்தியல்பும், அதன் தீவிளைவும், கல்லுங்கரையச் சொல்லும் கனிசெங்கவிதைச் செவ்வியும் ஒத்துளவேனும், கதையா லறங்கூறி ஒழுக்க நெறி நிறுவு முறையும், கதைக்குங் கால்—(கதைத்தல்—கதை வனைதல்) தம் மனோபாவந் துலைப்படக் கதைவனை சிற்பத்துறையும், சிறிது வேறுபட்டொளிரக் காண்பாம். இச்சிறு வேறுபாட்டின் துறையும் பயனுந் துருவுதலே ஈண்டு நுதலிய பொருளாம்.

(2) "கோதமன் தேவிபாற் காதலுற் றுழந்த அமரர்கோன், அம்முனிவ னில்லாத அமைய நோக்கி, அவனுருத்தாங்கி அகலிகையை அடைந்து, தனக்குவமையில்லா அத்தைய லழகும், அதனாற்றானுறுந் தாப மிகையுங் கூறி, தானறந் தவிர்ந்து, தமியளைத் தழுவித் தன் காம வெறி தணிந்து மீண்டான். ஒப்புரவு துறந்து, உருக்கரந்துட் செறிந்து உரிமையற மிறந்து தன் மானங் கட்ட கள்வனைக்கண்ட முனிவன் அவன் ஆண்மையடி மூலமறச் செய்தகற்றி, கற்பிழந்த மனையாளைச் சபித்து நீத்தான்," என்பர் வடமொழிக் கம்பர்.

(3) என்றுமுள தென் தமி ழியம் யிசைகொண்ட தமிழ் வான்மீகர், இக்கதையையே சிறிது திருந்தத் திரித்துக் கூறுவர். "தேவர் கோன், மையலால் அறிவு நீங்கி, அவ்விய மவித்த சிந்தை மாமுனிக்கு அற்றஞ்செய்து, அவனுருவமே கொண்டு புக்கான். புக்கவன் மனைவியோடும் காமப்புதுமண மதுவின் தேறல் (உண்டான்). ஒக்கவுண்டிருத்தலோடும் (உண்மை) உணர்ந்தனளாய் (தன்னிலை) தக்கதன்றென்ன வோராள் வெருவித் தாழ்ந்தனளிருந்து. நிரந்தரம் உலகில் நிற்கும் மாயா நெடும்பழி பூண்டு நின்றாள் நெஞ்சினாற் பிழைப்பிலாத (அகலிகை) தடுப்பரும் சாபம் வல்ல வரம் தருமுனிவன் வருதலும், பூசை (பூசை=பூனை) யாய்ப் போகலுற்ற புரந்தரன் செய்ததையுணர்ந்து, சுடுசரமனைய சொல்லால், ஆயிர மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாக,' என்றேயினன். புல்லிய பழியினோடும் புரந்தரன் போய பின்னை, மெல்லியலாளை நோக்கி 'விலைமக ளனைய நீயும், கல் இயலாதி,' என்றான். கருங்கல்லாய் மருங்கு வீழ்வா ளாய (அகலிகை) 'பிழைத்தது பொறுத்த லென்றும் பெரியவர் கடனே. கடவுளென்னாய்! முடிவு இதற் கருளுக,' என்ன (வேண்டினள்), 'இராமன் என்பான் கழற்றுகள் கதுவ, இந்தக் கல்லுருத் தவிர்தி,' எனக் கூறிக் கற்பில்லா இல்லாளைத் தணந்து நீத்தான், என்பது கம்பர் கதை.

(4) வான்மீகர் கதையில், வேட்டவன் வேடங் கொண்ட வேந்தன்புன் வேட்கை கண்டும், வெறுத்திலள் முனிவன் தேவி. இருளிடை இல்ல மெய்தி, இயைந்ததோர் அற்றஞ் சூழ்ந்து, தமியளைத் தழுவி, அன்னாள் வாழ்க் கையுங் கற்புங் கொன்று, வடுவிலா முனிவனுக்கு வசையையும் வழங்கவந்து, **"தீவினை நயந்து செய்த தேவர் கோன்"** இழிவே சாலத் தெரித்தனர் வேடஞானி, கற்பினைக் கவர வந்த காமியாங் கள்வன் முன்னே கையறவு காட்டிய அகலிகை, தற்கொண்டான் மானமும், தன்னறக்கற்பும் பேணிச் சோர்விலாது தற்காக்குந் தாளாண்மை காணாமையோடு, மானவூதியம் போக விட்டு, மாசுடைச் சிறு காம ஏதங்கொண்டு மாழ்கி, மனைநல மிழந்து மறுகிய அம்மங்கையின் பரிதாப நிலையையும், காமுகன் கழி பெரும் பழியையும், கொண்டவன் கோபநெறியையும் மிகையுங் குறையு மின்றியினிது பாடியுள்ளார். ஆடவனுக்குப் பரதாரம் அபயப் பொருளாம். பிறர் மனை போற்றிப் பேதையர் கற் பறங் காப்பதே ஆண்மை முதலறமாகும், அவ்வறம் பேணித் தன் மான மதிக்கு மாடவர் அனைவரும் பிறர் மனை நயவாப் பெற்றிய ராவர். அபலையர் கற்பற மோம்பத் துணை நிற்பதைவிட்டு, பெண்மைப் பெருங் கலம் பறித்தவரைப் பீழை யட்புகுத்தும் பேடியர், 'நாணுடை நல்லாரிடை நாணும்'புடவை கட்டாத பெண்டிரே யாவர். "பிறர் மனை நோக்காத பேராண்மை" யில்லாத இந்திரன் பாற் பொறை பழிக்குங் குறை கண்ட முனிவன், அவன் ஆணவ விரை களைந் தடக்கித் தவறுக்குத் தக்கவாறு ஒறுப்பிறுத்த பெற்றி, நெறியிறந்த அரசரையும் சென்று தாக்கும் அறன் வலியுறுத்தி நிற்கும்.

பிறனில் விழைந்த பேதையர்

(5) கவரா மனத்தால் நிறைகாக்கும் மகளிர் மன ஒருமைத் திறனும், மனைமாண்புடை மங்கையர் நிறையிறந்த நெறியில் காதலுக்குடன் பட்டுய்யா நேர்மையும் பேணும் கம்பர், முனிவன் மனையாளை வேந்தன் வேடத்தால் வஞ்சிக்கப்பட்ட பஞ்சையளாக்கி, "நெஞ்சினாற் பிழைப்பிலா"ப் பேதை வஞ்சியாய்ச் சித்திரித்துள்ளார். அழகு, நிதி, ஆற்றல்களால் ஒப்புயர்வற்ற பேரரசன் கையிற் றமியளா யகப்பட்ட பேதைப் பெண்ணாவாள் கையறவும், "பிறன்வரையாள் பெண்மை நயவா"ப் பீடழிந்த அமரேசன், முனிவனை அற்றஞ்செய்து மனையகற்றி, தனியுற்ற அவன் பெண்ணெளிமை பேதித்து, தன் கூடா விதுப்பால் தமியளைக்கூடிப் "பிறன் கடைநின்ற" அங்கிகரற்ற பேதையின் விளியாது நிற்கும் பழிச் செயலும், தன் மானங் கவர் கள்வன் அரசனேனும், தன்புறக்கடையில் "பெருந்தகைமை பீடழிய வந்தவிடத்து," அவனிளிவந்த புன்செயலுக்குத் தக்கபடி அவனாண்மை விதை யறுத்தடக்கிய இயலொறுப் பறமும், உலகிலிலுள்ளபடி காட்டும் வடமொழிக் கவிஞன் இயற்கை நவிற்சி நலம் இனிது பாராட்டத்தக்கதாம். எனினும், பிறர் மனம்புகுதொணாப் பெண்டிர், எதுபற்றியும், என்னிலையினும், ஏதிலான் தோள் தோய ஒருப்பட்டுயிர் சுமக்க வொல்லாராய்க் காவியப்படத்தில் பொறிப்பதே கவியறமெனக் கண்ட கம்பர், இந்திரன் பொய்வேட முணரா தகலிகை, அவனைக் கணவனுக்கருதி, தன் "பெரிய பேதைமைச் சின் மதிப்பெண்மையால்" வஞ்சிக்கப்பட்டுக் கற்பிழந் துழந்த மடந்தையாகவும், தன்னெஞ்சறியத் தவறியற்றாப் பேதை யாகவும், தன் கவிப்படத்தில் அவளைக் காட்டுவா ராயினர். **தீவினை நயந்துசெய்த தேவர் கோனை**"ப்போல மனமாசுடைய ளல்லள், கம்பரின் அகலிகை நள்ளிருளில், நாதனில்லாத் தனியகத்தில் தமியளேனும், எதிர்ந்தவனை ஏதிலனென்றறிந்த பின்னும், அவனிழி விருப்பை வெறுத்திலாமையால் மாயா "நெடும்பழி பூண்டு நின்றாள். வான்மீகரின் அகலிகை அற்றஞ் சூழ்ந்துற்ற அமரேசனுக்கு, அபலை அச்சமிகையாலோ, அன்றி வஞ்ச நெஞ்சன் விஞ்சையிடை விபரீதவிளை வுணர வொல்லாக் கழி பெருங் கையறவாலோ, "பெண்ணியலார் கண்ணிற் பொதுவுண்ப" தோடமையாது நல்லார் பலர் நலமுந் தோய்ந்த புரந்தரன்" பரந்த மார்பு நண்ண" மங்கை மறுத்திலள், எனக் கொள்வார் கொள்க. மறுக்கொணாளேனும், வெறுக்கவுமிலளாய், வேண்டா விருப்பொடு நேடா நிதியென, வேந்தன் றேட்டுயின்று உவந்து மெய் நலம் வழங்கி, தன் மனம் உடலோடு மாசுபட்டழிய, கற்பொடு கொண்டவன் மானமுங் கழிய, பின்னுந்தன்னுயிர் பேணுமவள் பெண்ணீர்மை என்னாம்? தண்டமிழ்ப் புலவர் பெண்ணலம் பேணி, அகலிகையின் மனமா சகற்றி, அவள் கற்பின் களவைத் "தீவினை நயந்து செய்த தேவர் கோன்" தனிக்கரவாக்கிக் கதையைச் சிறிது மாற்றி வைத்தார். அகத் தழுக்கிலளேனும், கம்பர் கவிப்பெண்ணாவாள், கணவன் தூய பாயலும், அவன் காதற்கே தனியுரிய தன்னுடலும், அயலவன் பரிசத்தால் புனிதமிழந்து மாசேறிக் கழியாப் பழிக்கிடனாயது கண்டபின்னும், தன்னையும் தன் நிறை கவர்ந்த கள்வனையும் வெறுத்துயிர் வீயாமல்

வீட்டாமல், தன்னால் மானமிழந்த தவறற்ற மாதவன் அற வெகுளிக்குத் தான் ஆளான போது, அவள் தன் "ஊன் ஓம்பும் வாழ்க்கை" விரும்பி, "வரந்தரு முனிவன்" அருளால் சாப விலக்கும் தன்னையவன் தணந்த நிலைக்கு விமோசனமும் வேண்டி யிரந்து பெறுவாள். இக்கதையில், பேதைமைப் பெண்டிர் பெண்ணியல் புக் கிரங்கிப்பேணுவது ஆடவர்க் கமைவ தாயினும், பெண்ணீர்மை பீழைபடாது பிறங்கு மாறில்லை. இது வுமன்றித் தீவினையைத் தான் விரும்பித் தேடாவிடினும், சமையம் நேர்ந்த போது தன் கருத்தொருமித்துத் தவறிழைத்த வான்மீகர் அகலிகைக்கே, கோதமன் தண்டமிருத்தது பொருத்தமாகும். கரவிலா நெஞ்சுடைய கம்பரின் அகலிகைக்குக் கடுஞ் சாபம் தந்த கணவன், அறநிலையும் அதன் முறையிற்றக வொருப்பு மறியாத தறுகணனாய் அமைவனன்றோ? இத்தரும சங்கடந் தவிர்க்கக் கருதிக் கம்பர் படும் பாடு பாராட்டத் தக்கதேனும், அவர் முயற்சி முட்டின்றி யினிது முடிந்ததாக் கருதற்கிடனுமில்லை. கற்பழிந் தொழியும் வரை காமக்கள்வனைக் கணவனாகவே கருதற் கிடனுண்டாயின், காதற் களவாற்றி முடித்தபின் அவன் சொல்லாமலே அகலிகை யவனை யறியக் காரணங் காட்டப்பட வில்லை. மணமற்ற காமக் கள் களித்துண்பவள், உண்மையை உணர்ந்த தெக்கால்? "ஒக்க உண்டிருந்த லோடும் உணர்ந்தனள்," எனுங் கவிவாக்கு, 'காம நறவுண்ணும் போதே யுணர்வும் பெற்றனள்,' எனவும், 'உண்டு முடிவுற்றது முணர்வதானாள்,' எனவும் பொறுமைப் பொருள் படக் கிடக்கின்றது. எது பற்றி எட்போ தோர்ந்தாளென வரையறுத்துக் கூறொணாமையால் இரட்டுற மொழிந்து வைத்தனரோ? என்றாகிப்பார்க் கிடந் தருகின்றது. மேலும், திருத்தரிய தவறு தெளிந்த பிறகும், தன்னிலை "தக்கதன்றென வோராள்—தாழ்ந்தனளிருந்தாள்," என்பர் கவி. இவவோராமை, தானுண்ட காமப் புதுமணத் தேறலின் மயக்கா லாயிற்றோ? அன்றிப் பிறிது காரணமுடைத்தா? தக்கதன்று, என்றுணராவிடின், அவள் தலை தாழ்ந்து மாழ்கி யிருக்க நியாயமில்லை. முற்றுங் குற்ற மற்ற மனத்தள் வெட்கி யுட்க வேண்டிலள். தவறிலாத் தையலுக் கவலமில்லை யன்றோ? இன்னும், அவள் உணர்ந்தது எது? ஓராதது எது? கணவனில்லாத அயலானால் இழுக்கொணாத் தன் பெண்ணலம் நுகரப்பட்டதை யுணர்ந்தனளேல், அது தாங்கரிய அவலமென்ப தோராத தேனோ? தானிறை யிழக்க நேர்ந்தது குறை யென் றறிந்தும் அது தனக்குப் பழி விளைக்கும் குற்ற மென்றோராள், எனக் கொள்ளில், குற்றமற்றாள் குழைந்து அஞ்சிக் குலை வதற்கில்லை. அவளுக்கு முனிவ னறக் கொடுஞ் சாபமீவதும் தகவுடைத் தன்றாம். "நெஞ்சினாற் பிழைப்பில" ளாய்த் தான் திருத்தீட்டிய அகலிகைக்கு வருஞ் சாப தண்டத்திற்குத் தகவுடைக் காரண மமைக்கும் கவியறங் கடக்க லாற்றாத கம்பர், வான்மீகரி டர்ப்படா விடத்தில் வாற்டர்ப் படுவதா லன்றோ? "காமப் புதுமண மதுவின் தேறல், ஒக்க உண்டிருத்த லோடும் உணர்ந்தனள். உணர்ந்த பின்னும், தக்கதன் றென்ன வோராள்: தாழ்ந்தன ளிருப்ப," தாழாது முடுகி வந்த முனி," "விலைமக ளனைய

நீயும் கல்லிய லாதி" எனுஞ் சுடு சொல்லால் அவளைச் சபிக்கவும், "நெஞ்சினுற் பிழைப் பிலாள்," "வெருவி மாயா நிரந்தரம் நிற்கும் நெடும்பழி பூண்டு" நிற்கவும், பாடியுள்ளார்.

(இன்னும் வரும்.)

எஸ். எஸ். பாரதி.

நூல் நூற்றலின் மகிமை.

நூல் நூற்றலில் ஊக்க மில்லாத வாலிபர்கள் கீழ்க் கண்ட குறிப்புகளைக் கண்ணுற் றுராய்ந்தால் நூல் நூற்றலின் மேன்மையும் அதனுள்ளிருக்கும் தியாகமும் புலப்படும்.

1. ஆங்கிலக் கவியான வேர்ட்ஸ் ஒர்த் என்பவர் உரோமத்தினின் றும் நூற்கும் நூலை மனத்தினின்றும் வெளிக்கிளம்பும் அன்பிற் கிணை யாக்கிப் பாடியிருக்கிறுர்.

2. பூர்வீக வைஷ்ணவ ஹிந்துக்கள் தங்கள் கடவுளுக்குச் செய் யும் பூஜை சடங்கு முதலியவைகளில் கையால் நூற்ற நூலை உப யோகிப்பது விசேஷமெனக் கருதுகின்றனர்.

3. சிசுமகிரி யென்னு மிடத்தில் கௌதம புத்தர் வசித்த பொழுது அங்குள்ள நகுலபித்த னென்பவன் இறக்கும் சமயத்தி லிருந்துகொண்டு மனைவி மக்களைப் பார்த்துத் தயங்கிக் கலங்கிய பொழுது அவன் பத்தினி சொன்னதாவது:—

"நான் நூல் நூற்க வல்லவளாதலால் இதன் மூலமாக என்னை யும் பிள்ளைகளையும் காப்பாற்றிக் கொள்ள முடியுமாதலால் தாங்கள் அமைதியுடன் கடவுளைப் பிரார்த்தித்து உயிர்துறக்க வேண்டுகிறேன்."

4. கத்துலஸ் என்னும் ஒரு இத்தாலிய கவிவாணர் கி. மு. 99-ம் ஆண்டில் இராட்டினத்தால் நூல் நூற்றலைப் புகழ்ந்து வர்ணித்திருக் கிறுர்.

5. கிறிஸ்து பிறப்பதற்கு 100-வருடங்களுக்கு முந்தியே 'தக்ளி' என்றழைக்கப்பட்ட நூல் நூற்கும் இராட்டினம் உலகத்தினிடை முதல் முதலாக டெக்காவிலிருந்து வெளி வந்தது. இந்த இராட்டினத் தின் மூலமாய் மிகவும் நேர்த்தியான 550-ம் நெம்பர் நூலை டெக்காவி லுள்ளவர்கள் நூற்றனராம்.

வாழ்வும் சோதனையும்.

உலகில் மனிதவாழ்வில், என்றும் சுகமே பெறும் மனிதன் ஒருவனும் இல்லை. தனது வாழ்நாள் முழுதும் சிறிதேனும் இன்பம் பெறாது துன்புற்றவனும் இல்லை. சுகம், துக்கம் இரண்டும் கலந்து வருவதே இயற்கை. ஏனெனில், கஷ்டமின்றிச் சுகம் இல்லை. இருள் இருந்தால் தான் வெளிச்சம். வேற்றுமை என்பது ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களின் ஏற்றத்தாழ்வு. ஒளியெனின் அதனின்வேறான இருள் உண்டு. அங்ஙனமே சுகம் எனில் அதனில் வேறாய துக்கமும் உண்டு. வெயிலில் அலைந்தாற்றான் நிழலருமை தெரியும். துன்பங்களை அனுபவித்தவன் தான் சுகத்தை நன்றாய் அனுபவிப்பான்.

* * * * *

வாழ்க்கையின் இடையே கலந்து வரும் வேதனைகள் எல்லாம் மனிதனுடைய அறிவைத்துலக்கும் சோதனைகள். கடவுள் அத்தகைய சோதனைகளை அளிக்காவிடின், மனிதன் அறிவு வளர்ச்சி அடைய மாட்டான். சோதனையின் உணர்வினால் ஒருவன் அபூர்வ ஞானம் பெறுகிறான். சோதனைகளில், மக்கள் தம் தம் திறனால் தேறும் உயர் சக்தியை இறைவன் அளித்துளான். எவ்வெக் காலங்களில் சோதனையின் எல்லைக்குள் நமது வாழ்வு புகுமோ அவ்வக்காலங்களில் சோரா ஆண்மையுடனும், பெரு முயற்சியுடனும், பொறுமையுடனும், தமது அறிவினாலும், ஆற்றலினாலும், சோதனையை விட்டு வெளியேறிவிட்டோமாயின், எத்தகைய சுகம் நம்மை அணுகக் காத்திருக்கும் என்பதைச் சொல்வ தரிது.

* * * * *

மனோதிடனும், போதிய ஆற்றலும் இன்றிக் கடவுளின் சோதனையில் தேறுதல் இயலாது. பள்ளியில் படிக்கும் மாணவன் சோதனைகளாகிய பரீக்ஷையில் தேறி உயர்வகுப்பை அடைகிறான். அவ்வாறே மனிதனும் உலகமாகிய இயற்கைப் பெரும் பள்ளியில் ஈசனது சோதனையிற் றேறி வெளிவரின் சாணையிட்ட மணியென ஒளிர்வன் என்பதில் ஐய முண்டோ?

* * * * *

சுகத்தை அன்புடன் வரவேற்கும் மனிதன் துன்பத்தை வெறுக்கிறான். துன்பங்களெல்லாம் தனது வாழ்வில், பரிசுத்தமடையவும் உயர்ந்த அறிவைப் பெறவும், கடவுளால் அளிக்கப்படும் சோதனைகள் என்பதை அவன் அறிகின்றானில்லை. மெய்யறிவாளர் பலர் இவ்வுண்மையை அறிவார்களாதலின் அவர்கள் இன்பதுன்பங்களில் பெரிதும் துன்பத்தை உவகையுடன் ஏற்கின்றார்கள். விஷத்தையும் ஜீரணிக்கச் செய்யும் சக்தி கொண்டவர்களுக்கு அஜீர்ணம் ஏது? துன்பத்தை, அதனுடைய முழு ஆற்றலுக்கும் தம்மை ஆளாக்கிப் பொறுமையாய் ஏற்றுக் கொண்டால், அந்தத் துன்பம் என்ன செய்யும்? பலவித கூர்மையான ஆயுதங்களால் செதுக்கப்பட்ட மரப்பொம்மைகள்

வாழ்வும் சோதனையும்

கண்ணைக் கவரும் அழகிய உருவங்கள் பெறுகின்றன. மனிதனும் காடு முரடான சோதனைகளில் பழகி விட்டானானல் எய்தற்கரிய மன அமைதி அடைந்து விடுகிறான். அப்பொழுது அவன் உண்மையில் உலகவாழ்வின் இரகஸ்யத்தை உணர்ந்து கொள்கிறான்.

*   *   *   *   *

உலகவாழ்க்கை போலிநிழல் என்று நினைப்பவர்களாகிய மஹா ஞானிகள் சோதனைகளைச் சொப்பனம்போல் எண்ணிக் கடந்து விடுகிறார்கள். உலகில் தனது கடமையைப் பயனை எதிர் நோக்காது இயற்றும் கரும யோகிகள் சோதனைகளை, உணர்விலாத யந்திரங்கள் சுழலுகையில் யாரேனும் கல்லெறியின் அது எப்படி ஏற்றுக்கொண்டு மறுபடியும் தனது சுழலுந் தொழிலிலே ஈடுபடுமோ, அங்ஙனமே சோதனைகளைப் பொறுத்து ஏற்றுக் கொண்டு அவைகளை ஜீரணம் செய்து விட்டுத் தமது கடமையிலேயே கண்ணாயிருக்கிறார்கள்.

*   *   *   *   *

ஒரு பக்தன் இந்தச் சோதனைகளை யெல்லாம் ஏற்பது தான் விசித்திரம். உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்து அன்பிற் கரைந்து கரைந்துருகும் அவன் சோதனைகள் வருங்காலையில் மிகுந்த இன்பத்தை அடைகிறான். அவைகளெல்லாம் ஈசனின் திருவிளையாடல்கள் என்று மகிழ்கிறான். குழந்தைகள் வைவது பெற்றோர்க்கு இன்பந்தருவதும், இன்பந்துய்க்கும் வேளையில் பிணக்கு, காதலர்கள் ஒருவரை யொருவர் வைவதும் இருதிறத்தார்க்கும் இன்பம் பயப்பதும் எவ்வாறு இயல்போ, அங்ஙனமே வாழ்வின் சோதனையிலும் ஒரு பக்தன் மிகுந்த இன்பத்தைக் காண்கிறான்.

> 'இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தெ னென்புருக்கிக்
> கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் பொன்னடிகள்.'

என்று ஈசனின் பேருளை வியக்கின்றார் மணிவாசகர். 'இரும்பு போன்ற மனதுடையவனை இழுத்திழுத்துக் கரும்பின் சுவையைக் காட்டினாய்.' என்கிறார். அவர் அடைந்த சோதனைகளுக்கு அளவுண்டோ? அவைகளிலெல்லாம் தேறியன்றோ பெற்றனர் அச்சுவையை? ஞானியர், அறிவாளர், அறவோர், அன்பர், எல்லோரும் சோதனைகளைத் தமது வாழ்க்கையில் கடக்காமல் உயர் பதவி அடைந்தாரில்லை. எந்தத் துன்பம் வரினும், மனந்தடுமாறாத மனோதிடம் அன்றோ சோதனையில் வெற்றி தருவது?

> —வெவ்வி அருகுவது கொண்டிங் கலைவதேன்? என்றவரும்
> —முட்டமுட்டப்
> பஞ்சமே ஆனாலும் பாரம் அவனுக் கன்றாய்!
> நெஞ்சமே அஞ்சாதே நீ. —என்று

திடங்கூறியவரும் எவ்வளவு பெரியவர்க ளானார்கள்! தமிழகம் எத்தனை மூதறிவாளர்களைப் பெற்றிருக்கிறது? அவர்கள் எல்லோரும்

சோதனையின் வேதனையைக் கடந்த பேரறிவாளர்களா யிருந்தமையால் என்றும் இன்பம் துய்த்தனர். இன்றோ, ஊக்கமின்றி உழலும் மக்கள் மிகுந்தனர். சோம்பலும், சினமும் துதையா மனத்தினர் எங்ஙனம் சோதனையில் வெற்றியுறுவர். வெற்றி வேண்டும் வெற்றி வேண்டும் என்று அண்ணாந்திருப்பதில் பயனென்? முயற்சி அன்றோ வேண்டும்!

'மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.' —நீதிநெறிவிளக்கம்.

என்பது காரியத்தைச் சாதிப்பவர்கள் குணத்தை விளக்குவதன்றோ? மெய்வருத்தம், பசி, தூக்கம், நிந்தை இவையெல்லாம் சோதனைகளன்றோ? இவைகளைக் கவனியாது மீறிக் கருமம் ஆற்றுபவரன்றோ ஆண்மையுடையோர்! முயற்சியில் எத்துணை சோதனைகள் வரும். அவைகளை விஞ்சும் விடா முயற்சியன்றோ வெற்றிக்கு வழி. 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.' 'ஊக்கமது கைவிடேல்.' 'மனந் தடுமாறேல்.' என்ற பொன் மொழிகளெல்லாம் சோதனையை ஜயிக்கும் வெற்றியை யன்றோ வெளி யிடுகின்றன?

* * * * *

தொழிலாளிகள் பல துன்பங்களைக் கடந்து வெற்றி உறுகின்றனர். வீரர்கள் போர்க்களமாகிய சோதனையில் தேறி வெற்றியுறுகின்றனர். மாணவர்கள் கேள்விகளாகிய சோதனையில் தேறி வெற்றி பெறுவர். மனிதன் பல துன்பங்கள், மனவருத்தங்கள் ஆகிய சோதனைகளிற் றேறி அரிய மாணிக்கமாகிய அனுபவத்தை அடைகிறான். அனுபவம் வெற்றிக்கு வழியுரைப்ப தன்றோ? ஞானிகள் மாயையின் சோதனையைக் கடந்து ஞானம் பெறுகின்றனர்.

ஆக, இறைவன் ஒவ்வொரு வகை யினர்க்கும் அவரவரது வெற்றிக்குப் போகும் வழியினிடையே அவரவர்கட்குத் தகுந்த சோதனைகளை உண்டாக்குகிறார். மனிதன் அவைகளில் வெற்றி யுறுவானாயின் அவன் தனது வாழ்க்கையின் பயனை அடைந்தவ னாவான். சோதனை, மக்கள் யாவர்க்கும் ஒரே முறையில் ஏற்படுவ தல்ல. சிலர் பெரிய சோதனைகளுக் காளா கின்றனர். ஆனால் எவ்வளவுக் கெவ்வளவு கடின சோதனைகளைக் கடக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு உயரிய வெற்றியைப்பெறுவார்கள் என்பது திண்ணம்.

ஆதலின், வாழ்க்கையில் சோதனைக் கடவுளின் கருணையால் ஏற்படும் ஒரு பரீக்ஷையாம். அவைகளைப் பொறுமையாய் ஏற்று அனுபவிப்பவன் அமரவாழ்வு எய்துவான் என்பதில் ஐயமின்றாம்.

சுபம்!

மோகனூர். கீ. வா. ஜேகநாதன்.

கொடுங் காற்று.

(தொடர்ச்சி)

நங்கையும் நம்பியும் ஒருவரை யொருவர் தம்முள் காதல் கொண்டதைக் கிழவன் பராபரன் அறிந்து கொண்டான். ஆகையால் அவர்கள் காதலைச் சோதித்தறிய எண்ணினன். ஆகவே அவன் பரதநாதனைப் பார்த்து, அவன் (பரதநாதன்) உள வறிவதற்காக வந்த ஒற்றனென்றும் தனக்குச் சொந்தமான அத்தீவைத் தன்னிடத்தி லிருந்து கவர்ந்து கொள்ள வந்த அந்நிய னென்றும் அவனைக் கோபித்துக் கடிந்து பேசிக் கடைசியாக " நீ எனக்கு விரோதியாகக் காணப்படுகிறபடியால் உன் கழுத்தையுங் காலையும் கயிற்றினல் கட்டி உன்னைச் சிறையில் வைக்கப் போகிறேன். நீ பருகும் தண்ணீர் உவர்ப்புள்ள கடல் நீரா யிருக்கும். உமியும் தவிடும் உனக்கு உணவாகக் கொடுக்கப் படும். உன் சிறைச்சாலை இருள் அடர்ந்து காற்றோட்ட மில்லாத பொதி யறை யாகும்" என்று கண்டிப்பான குரலில் கடுகடுத்துச் சொன்னன்.

" யாரும் அவ்வளவு இழிவாக என்னை நடத்தும்படி நான் இடங் கொடுக்க மாட்டேன் ஐயா! யாரா யிருந்தாலும் ஒரு கை பார்த்து விடுவேன். என்னை ஒருவரும் சிறையில் அடைக்க முடியாது" என்று சொல்லிப் பரதநாதன் தன் வாளை உரையி லிருந்து இழுத்துச் சண்டைக்கு ஆயத்தமாய் நின்றான்.

இதைக் கண்ட கிழவன் பராபரன் தன் மந்திரக் கோலினல் பரதநாதனைத் தொட்டான். தொடவும் அவன் அவ்விடத்திலேயே கற்கம்பம் போல் அசைவற்று நின்று விட்டான்; அடிபெயர்த்து வைக்கவோ அப்படி இப்படி அசையவோ அவனல் இயலவில்லை. தான் எண்ணியபடி தன்னல் அசைய முடியாதிருப்பதைக் கண்டு மிக்க அதிசயப் பட்டான் பரதநாதன்.

தன் காதலன் இவ்வித நிலைமையி லிருப்பதைக் கண்ட மிராந்தை தன் தந்தையை மிகவும் வேண்டிக் கொண்டாள். "அப்பா! அவர் மீது உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்? உலகத்திலுள்ள மனிதர்களில் இவரைத்தான் இரண்டாவதாகப் பார்க்கிறேன். இவரைப் பார்த்தால் நமக்குக் கெடுதி செய்ய வந்தவராகத் தோன்றவில்லை. தயை செய்து அவருக்கு யாதொரு துன்பமும் செய்ய வேண்டாம்" என்று இரந்து வேண்டினள்.

" குழந்தாய்! நீ ஒன்றும் பேச வேண்டாம்; எனக்குக் கோபம் வரும். இந்தப் போக்கிரிப் பயலுக்காக நீ பரிந்து பேச வேண்டாம். இவனை விட அழகான மனிதன் உலகத்தில் இல்லை என்று நினைக்கிருய்? குரூபியான காலிபனை விட இவன் அழகாயிருப்பதனல், இவனை விட அழகான மனிதர்கள் உலகத்தில் இல்லை என்று நீ நினைக்கிருய் போலும், என்று கடிந்து பேசினன் கிழவன் பராபரன். தன் மகளின் மன நிலையை அறிவதற்காகவே அவன் இவ்வாறு பேசினன். மிராந்

தையோ "வேறே எந்த அழகான மனிதனையும் பார்க்க எனக்கு விருப்பமில்லை" என்று விடை யளித்தாள். இவ்விடையைக் கொண்டு பராபரன் தன் மகளின் மன உறுதியை யறிந்து கொண்டான். ஆயினும், அவள் காதலை இன்னும் நன்கறிவதற்காகவும் பரதநாதன் தன் மகளை உண்மைக் காதலோடு நேசிக்கிறனு என்பதைச் சோதிப்பதற்காகவும் அவனுக்குச் சில சங்கடங்களை யுண்டாக்க எண்ணினன். ஆகையினால், அசைவற்று நின்ற பரதநாதனைப் பார்த்து, "ஐயா, நீர் இனி எனக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவர்தான். இப்பொழுது உம்மால் அசையவும் கூடவில்லை. ஆகையால் என்னை எதிர்க்க உம்மால் ஆகாது. இப்பொழுது என்னைப் பின் தொடர்ந்து சிறைச் சாலைக்கு வாரும்," என்று சொல்லி நடந்தான்.

"ஆம் ஐயா, உம்மிடம் ஏதோ பெரிய சக்தி இருக்கிறது. உம்மை எதிர்க்க என்னால் இயலாது. ஆகையால் உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஆயத்தமா யிருக்கிறேன்" என்று சொல்லிப் பரதநாதன் பராபரனைப் பின் தொடர்ந்து நடந்தான். அவ்விதம் செல்லும் போது மிராந்தையை அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். கடைசியாகக் குகை யண்டை வந்ததும், "என்னை இக் கிழவன் சிறையி லடைத்தாலும் எனக்குக் கவலை யில்லை. இந்த அழகியை மாத்திரம் தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்கும் பாக்கியம் கிடைத்தால் அதுவே எனக்கு ஆநந்த மாயிருக்கும்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

பரதநாதனை இருட்டறையில் அடைத்துச் சிறை வைத்த பராபரன் அவனை நெடு நேரம் அவ்விதம் வைத்திருக்கவில்லை. சில நாழிகை கழிந்த பின்னர் பராபரன் பரதநாதனை வெளியில் அழைத்து வந்து கடினமான சில வேலைகளைச் செய்யும்படி அவனுக்குக் கட்டளை யிட்டுத் தான் தன் அறைக்குச் சென்று சுவடிகளை வாசிக்கப் போவதாகத் தன் மகளிடம் தெரிவித்து அவ்விடம் விட் டகன்றான்.

கனமுள்ள மரத்துண்டுகளைச் சுமந்து கொண்டு வந்து ஓரிடத்தில் அடுக்கி வைக்கும்படி பராபரன் பரதநாதனுக்குக் கட்டளை யிட்டிருந்தான். அரசன் மகனாகிய அவன் செல்வத்தில் களித்து வளர்ந்தவனாகையால் இந்த வேலை அவனுக்கு மிகுந்த கடினமாகவும் துன்பமாகவும் இருந்தது. அவன் இவ்விதம் கஷ்டப் பட்டு மரத் துண்டுகளைத் தூக்கிக் கொண்டு போவதைக் கண்ட மிராந்தை மன முருகி அவனிடஞ் சென்று "ஐயோ! ஏன் இவ்வளவு கஷ்டப் பட்டுக் களைப்புடன் வேலை செய்கிறீர்கள்? என் தந்தை சுவடிகளை வாசிக்கத் தன் அறைக்குச் சென்றிருக்கிறார். இன்னும் மூன்று மணி நேரம் வரையில் அவர் வெளியே வர மாட்டார். ஆகையால், கொஞ்ச நேரம் உட்கார்ந்து களைப்பாறுங்கள்" என்று பரிதாபத்துடன் பேசினள்.

"என் அன்புள்ள நங்காய்! என் வேலையைச் செய்து முடித்த பிறகு தான் நான் களைப்பாறுவேன். வேலையை முடிக்காமல் களைப்பாற எனக்கு மனமில்லை" என்றான் நம்பி.

கோடுங் காற்று

"இல்லை. தாங்கள் கொஞ்ச நேரம் உட்கார்ந்து களைப்பாறுங்கள். அது வரையில் நான் கொஞ்சங் கட்டைகளைக் கொண்டுபோய் அடுக்கி வைக்கிறேன்" என்றாள் நங்கை.

தனக்காக அவள் வேலை செய்ய இசைந்ததை அவன் ஒப்புக் கொள்ள வில்லை. மிராந்தை பரதநாதனுக்கு உதவி செய்வதற்காக வந்த போதிலும் உண்மையில் அவன் வேலை செய்வதை அவள் தடைப்படுத்தி விட்டாள். எப்படி என்றால் அவர்க ளிருவரும் ஒரு நீண்ட சம்பாஷணையைத் தொடங்கி முடிவில்லாமல் பேசிக் கொண்டே இருந்தார்கள். ஒருவரை யொருவர் காதலிக்கும் நம்பியும் நங்கையும் ஒன்று சேர்ந்தால் காதற் பேச்சை யன்றி வேறு என்ன வேலை தான் நடக்கும்?

காதலர் இருவரின் மன வுறுதியைக் கண்டறிய எண்ணங் கொண்டிருந்த கிழவன் பராபரன், தான் தன் மகளிடம் சொல்லியது போல் தன் அறைக்குச் சென்று சுவடிகளை வாசிக்க வில்லை. வாசிக்கச் செல்வதாகப் பாவனை காட்டி அவன் அவ்விடத்திலேயே மறைவாக நின்று அவ்விருவரும் பேசுவதை ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

பரதநாதன் தன் காதலியின் பெயரை அறிய விரும்பினான். மிராந்தை தன் பெயரை அவனுக்குச் சொல்லி, தான் அவனிடம் தன் பெயரைச் சொல்லக்கூடா தென்று தன் தந்தை கட்டளை யிட்டிருப்பதாகவும் அவர் கட்டளையை மீறித் தன் பெயரை அவனுக்கு வெளியிட்டதாகவும் அவள் அவனுக்குத் தெரிவித்தாள். மறைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்த பராபரன் தன் கட்டளையை மீறிப் பெயரை வெளியிட்டதற்காக அவள் மீது அருவருப்புக் கொள்ளவில்லை. அவள் காதல் வயப்பட்டு அவ்விதம் சொன்னாள் என்ப துணர்ந்து அவன் தனக்குத் தானே நகைத்துக் கொண்டான்.

பிறகு, பரதநாதன் தன் காதலியை நோக்கித் தான் அவளை முழு மனத்துடன் தன் உயிர்போல் நேசிக்கிறதாகச் சொல்லி யதையும்; தான் பார்த்த பெண்களுக்குள் அவளே (மிராந்தையே) மிகுந்த அழகானவள் என்று அவன் புகழ்ந்து சொல்லியதையும், பராபரன் மறைவிடத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

தன் காதலன் தன்னைப் புகழ்ந்ததற்கும் காதலைக் குறித்துப் பேசியதற்கும் பதிலளித்த மிராந்தை, "நான் மற்றப் பெண்களின் முகத்தை ஒருபோதும் கண்டதே யில்லை. என் தந்தையையும் தங்களையும் அன்றி வேறே மனிதரை நான் பார்த்ததுமில்லை. உலகத்தில் மனிதர் எவ்வளவு அழகாக இருந்தாலும் சரி, அவர்களைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. உலகத்தில் உம்மை யன்றி வேறே மனிதரை நான் கண்ணெடுத்தும் பாரேன் என்பது சத்தியம். இதை நீங்கள் உறுதியாக நம்புங்கள். உலகத்தில் நான் விரும்பும் மனிதர் தாங்கள் ஒருவரே" என்று சொல்லிப் பிறகு, "ஓ! என் தந்தை யிட்ட கட்டளையை மறந்து உங்களிடம் எதையும் ஒளிக்காமல் தாராளமாகப் பேசிவிட்டேனே" என்றாள்.

செய்து என்னுடன் வந்து அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லி அவர்களைத் தன் குகை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் ஓரறைக் கதவைத் திறந்து காட்ட அங்கே, அவர்கள் தேடித் திரிந்த பரதநாதன் மிராந்தையுடன் சதுரங்கம் ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் ஆச்சரிய மடைந்து ஆனந்தப் பட்டார்கள்.

தந்தையும் மகனும் ஒருவரை யொருவர் கண்ட போது அவர்களுக்குண்டான ஆனந்தத்திற்கு எல்லை யில்லை. ஒருவரை யொருவர் இறந்து விட்டதாக நம்பி யிருந்த அவர்கள் திடீரென்று சந்தித்த போது அவர்களுக்கு அதிசயமும் ஆனந்தமும் உண்டாவது இயல்பன்றோ? புதிய மனிதர்களைக் கண்ட மிராந்தைக்கு எல்லோரையும் விட மிகுந்த அதிசயமும் ஆநந்தமும் உண்டாகி விட்டது. "என்ன ஆச்சரியம்! எவ்வளவு விநோதமான மனிதர்கள்! இது மிகுந்த விசித்திரமா யிருக்கிறது!" என்று வாய்விட்டுச் சொல்லி வியப்படைந்தாள்.

நேப்பிள் மன்னன் இளமையும் அழகும் ஒருங்கே யமைந்த அம் மங்கையைக் கண்டபோது "இச்சிறுமி யார்? நம்மையெல்லாம் ஒருங்கே சந்திக்கச் செய்த தெய்வமகள் போல் காணப்படுகிறாள்?" என்று ஐயுற்று வினவினான்.

பரதநாதன் தன் தந்தையை நோக்கி, "தெய்வமகள் அல்ல! பராபரருடைய மகள்; மிராந்தை யென்று பெயர். ஓ! அப்பா; என்னை மன்னிக்க வேண்டுகிறேன். தாங்கள் இறந்து விட்டதாக நான் நினைத்திருந்த படியால் தங்கள் விருப்பத்தைக் கேட்காமலே நான் இவளை மணஞ் செய்து கொண்டேன். நாங்கள் மணஞ் செய்து கொள்ளப் பராபரர் உத்தரவு கொடுத்தார். ஆகவே, பராபரர் எனக்கு மாமனார் ஆகிவிட்டார்." என்றான்.

"ஓ! மிக்க சந்தோஷம்! அப்படியானால் நான் மிராந்தைக்கு மாமனாராகிவிட்டேன். ஆயினும் மிராந்தையை நான் மன்னிப்பு கேட்க வேண்டியவனா யிருக்கிறேன்" என்றான்.

"ஐயா! கடந்த விஷயங்களைப் பற்றி இப்பொழுது ஒன்றும் பேசவேண்டாம். எல்லாம் சந்தோஷமாக முடிந்தபடியால் யாரையும் மன்னிப்பு கேட்க வேண்டியதில்லை" என்றான் பராபரன்.

பிறகு, பின்னு மொரு முறை பராபரன் தன் தம்பியைத் தழுவிக் கொண்டு கடந்த விஷயங்களை யெல்லாம் மறந்துவிட வேண்டும் என்றும் தான் தனியே தன் மகளுடன் இத்தீவில் சில கால மிருக்க வேண்டு மென்று தன் பழவினை யிருந்ததாயும் இப்போது நல்வினைப் பயனால் ஒருவரை யொருவர் சந்திக்க நேரிட்ட தென்றும் சொல்லி எல்லாம் ஊழ்வினைப்படி நடக்கிறபடியால் எதற்கும் வருத்தப் படக் கூடா தென்று ஆறுதல் சொன்னான்.

நெடுநாளாகக் காணாத தன் பழைய அரசன் பராபரனைக் கண்டு ஆனந்தங் கொண்ட காஞ்சலன் மணமக்க ளிருவரையுங் கண்டு களிகூர்ந்து மங்கள வாழ்த்து கூறிக் கடவுளைத் துதித்து வணங்கினான்.

கோடுங் காற்று

நேப்பிள் மன்னன் மரக்கலமும் மாலுமிகளும் என்னுனர்களோ என்று கவலைப் படுவதைக் கண்டு கிழவன் பராபரன், மாலுமிகள் அனைவரும் உயிர் பிழைத்து அத்தீவிலேயே இருப்பதையும் மரக்கலம் துறைமுகத்தில் உடைபடாமல் எவ்விதச் சேதமும் இன்றி இருப்பதையும் தெரிவிக்க, இந்த நல்ல செய்தியைக் கேட்டு மற்றவர்களெல்லோரும் ஆச்சரியமும் சந்தோஷமு மடைந்தார்கள். பராபரன் தன் ஒரே வேலையாளாகிய காலிபனை அழைத்து எல்லோருக்கும் உணவு ஆயத்தஞ் செய்யச் சொன்னுன். எல்லோரும் ஒருங்கிருந்து சந்தோஷ மாக உணவருந்திய பின்னர், பராபரன் தன் மகளுடன் எவ்விதமாகத் தன் வாழ்நாளைக் கழித்தா னென்பதைச் சொல்ல வேண்டுமென்று எல்லோரும் கேட்டுக் கொள்ள அவ்விதமே அவர்களுக்குப் பராபரன் தன் வாழ்க்கையின் விபரத்தைச் சொன்னுன். இவ்வாறு அன்றைப் பொழுது கழிந்தது. கடைசியாகப் பராபரன், "இன்று இரவு கழிந்து பொழுது விடிந்தவுடன் எல்லோரும் நமது ஊருக்குப் புறப்படலாம்" என்முன்.

"ஆம், ஆம். மிலான் தேசம் சென்றவுடனே எனது தமையனுக்கு முடி சூட்டி விழா கொண்டாட ஏற்பாடு செய்யவேண்டும்" என்முன் அந்தோனி.

"முடி சூட்டு விழா கொண்டாடின உடன் பரதநாதனுக்கும் மிராந்தைக்கும் திருமண விழா கொண்டாட வேண்டும்." என்முன் நேப்பிள் மன்னன்.

தனியே யிருந்த போது பராபரன் எரியனை அழைத்து "எரியனே! நாங்கள் எல்லோரும் நாளைக்கு மிலான் தேசம் போகிருேம்; ஆகையினுல் உன்னையும் மற்றப் பேய்களையும் இது முதல் என் ஊழியத்திலிருந்து நீக்கிவிட்டேன். இனி நீங்கள் விரும்பிய இடங்களுக்குப் போகலாம்" என்று சொன்னுன்.

விசுவாசமுள்ள எரியன் பேய் பராபரனை விட்டுப் பிரிய நேரிட்டதற்காக வருத்தப் பட்டு "ஐயனே! அங்ஙனமாயின் தாங்கள் மில்லான் தேசம் போய்ச் சேரும் வரையில் உங்களுக்குக் காவலாக நான் கப்பலைத் தொடர்ந்துவர விரும்புகிறேன். அதற்கு உத்தாவளிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டது. எரியனுடைய விசுவாசத்தைக் கண்டு வியந்த பராபரன் அதற்கு அவ்விதமே அனுமதி கொடுத்தான்.

அன்றிரவு எல்லோரும் இனிய கனவுகளைக் கண்டு கொண்டே அமைதியாக உறங்கினுர்கள். அன்றிரவு கண்ணுறங்கிய எரியன் பேய், மரக்கிளைகளில் நிழலடர்ந்த இலைக்கொத்துகளினிடையே வெயிலுக்கு ஒதுங்கி யிருப்பது போலவும், பெரிய மரங்களுக்கிடையே பறவைகளோடு தானும் பறந்து செல்வது போலவும், தும்பிகள் தேனீக்களுடன் சென்று மலர்களிலுள்ள தேனை யுண்டு களிப்பது போலவும்,

பல வித பூக்கள் நிறைந்த பசும் புற்றரையில் படுத்து உறங்குவது போலவும் மற்றும் தனக்கு விருப்பமுள்ள அனேக விளையாட்டுகளை யெல்லாம் விளையாடுவது போலவும் கனவு கண்டு உறங்கிற்று

மிராங்தையும் பாதநாதனும் நேப்பிள் தேசம் சென்று ஆடம்பர மாகத் திருமணஞ் செய்து கொண்டு இளவரசனும் இளவரசியுமாக முடிசூட்டப் பெற்று இன்பவாழ்வு வாழ்வது போலக் கனவு கண்டு கொண்டே உறங்கினார்கள். மற்றவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் ஊரில் சென்று உற்றார் உறவினர்களைக் கண்டு களித்து உரையாடி இன்புறு வது போலத் தமது மனோ வுலகத்தில் கண்டு கண்துயின்றார்கள். இவ்விதம் அந்த நல்ல இரவு கழிந்து பொழுது விடிந்தது. மாலுமி கள் எல்லோரும் பிரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து முடித்தார்கள்.

கிழவன் பராபரன் தனது மந்திரச் சுவடிகளையும் மாத்திரைக் கோலையும் பூமியில் ஆழமாகப் பள்ளந் தோண்டிப் புதைத்து விட் டான். எல்லோரும் எல்லாம் வல்ல இறைவனைப் போற்றித் துதித்த பின்னர் கப்பலேறித் தத்த மிடத்தில் அமர்ந்தார்கள். மாலுமிகள் பாய் விரித்து விடவும் அப்பெரிய அழகான கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப் பட்டுக் கருநீல வண்ணக் கடற்பரப்பில் மிதந்து மிலான் தேசம் நோக்கிச் சென்றது.

மயிலை. சீனி. வேங்கடசாமி.

வைதிகக் காபி.

காப்பி ஒட்டல்காரர்களும் வியாபாரிகளும் கீழ்க்கண்டிருக்கும் முறைப் பிரகாரம் செய்து வியாபாரம் செய்வார்களானால் நம் இந்தியர் களுக் கிருக்கும் அநேக கஷ்டங்கள் விலகி நற்சுகத்துடன் வாழ்வார்.

ஆவரம்பூ ஒரு பங்கு; நன்னாரி வேர் அரைப் பங்கு; கொத்த மல்லி கால் பங்கு; 16-ல் ஒரு பங்கு சுக்கு; இவை நான்கு வஸ்துக் களையும் வெயிலில் உலர்த்தி சூரணித்து ஓர் டப்பாவில் காற்றுப் போகா மல் வைத்துக் கொள்ள வேண்டும்.

வேண்டும் சமயம் காப்பி, தேயிலையைப் போல் உபயோகப் படுத்தலாம். சீனி, சர்க்கரையைப் பார்க்கிலும் பனைவெல்லம் சேர்த் துக் கொள்வது நலம். பனைவெல்லம் கிடையாவிட்டால் சீனி சேர்த் துக்கொள்ளலாம்.

மேற் காட்டிய விதம் ஒவ்வொருவரும் முயற்சியோடு செய்து அருந்துவிப்பார்களானால் இந்தியர்கள் தேக பலமும், சௌக்கியமும் அடைவார்களென்பது திண்ணம்.

பண்டை இந்தியாவில்
போக்குவரவு சாதனங்கள்

ஒரு 'சரித்திரக்காரன்' எழுதியது.

பிரிட்டிஷாருடைய ஆட்சி தலை காட்டுவதற்கு முன்னர் இந்தியா ஒரு பெரிய வனமா யிருந்ததென்றும் ஜனங்கள் அநாகரிகர்களாகவே இருந்தார்களென்றும் போக்குவரவு சாதனங்கள் சரியான படி அமைந்திருக்கவில்லை யென்றும், சரித்திர ஆராய்ச்சி ஒருவாறு முற்பட்டிருக்கும் இந்தக் காலத்திலும் சிலர் நினைப்பது ஆச்சரியமென்றே கூறவேண்டும். முகம்மதியர் ஆட்சியிலும், ஹிந்துக்களின் ஆட்சியிலும் பிரஜைகள் ஏறக்குறைய சுகமாக வாழ்ந்து வருவதற்குரிய எல்லா வசதிகளும் இருந்தன என்று கூறலாம். சாணக்கியருடைய அர்த்த சாஸ்திரத்தில் இது சம்பந்தமான விவரங்கள் காணப்படுகின்றன. சாணக்கியரும் சந்திர குப்தனும் சமகாலத் தவராதலால், சந்திர குப்தனுடைய காலத்தில், அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாவும் இருந்தன என்று அறிஞர் கருதுகின்றனர். இதற்கு மாறுபட்ட கருத்துடையாரும் சிலர் இருக்கின்றனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சந்திரகுப்தனுடைய இராஜ்யம் இப்பொழுதுள்ள பிரிட்டிஷ் இந்தியாவைக் காட்டிலும் விசாலமானதாயிருந்தது என்று கூறலாம். சிதறுண்டு கிடந்த சில்லரை இராஜ்யங்களை யெல்லாம் ஒன்று படுத்தி அதற்குத்தானே தலைமைபூண்டு அறமுறை தவறாது நிருவாகம் நடத்தி வந்த சந்திரகுப்தனுடைய திறமை புகழத் தரமன்று. ஓர் அரசாங்கமானது செம்மையாக நடைபெறுவதற்கு முக்கியமான சாதனங்களாகக் கருதப்படும் திறமையுள்ள இராணுவம், ஒழுங்குபட்ட ஆட்சி முறை, இராஜ்யத்தின் முக்கியமான பாகங்களைச் சம்பந்தப்படுத்தும் போக்கு வரவு சாதனம் முதலிய யாவும் சந்திரகுப்தனுடைய ஆட்சியில் இருந்தன என்று திண்ணமாகக் கூறலாம். அவன் காலத்தில் நிலமூலமாகவும் நீர்மூலமாகவும் செல்ல என்னென்ன சாதனங்கள் இருந்தன என்பதைப் பற்றி இங்குச் சுருக்கமாகக் கூறுவோம்.

சந்திரகுப்தனுடைய இராஜ்யத்திற்கு பாடலிபுத்திரம் தலைநகராயிருந்ததென்பது அனைவரும் அறிந்த விஷயம். அங்கிருந்து, இராஜ்யத்தின் நான்கு திக்குகளுக்கும், வியாபார நிமித்தம் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. எந்தத் திசையிலிருந்து வியாபாரம் அதிகமாக நடைபெற்றதோ அந்தத் திக்கில் பாதைகள் அதிகமாக இருந்தன. மற்றும் எந்தப் பக்கத்திலிருந்து விலையுயர்ந்த பொருள்களும் அதிகமாக உபயோகப்படக் கூடிய பொருள்களும் வந்தனவோ அந்தப் பக்கத்துப் பாதைகள் முக்கியமாகக் கருதப்பட்டன. உதாரணமாக வடக்கே ஹிமாசலத்தை நோக்கிச் செல்லும் பாதைகளை விட, தட்ச

ணத்தை நோக்கிச் செல்லும் பாதைகள் முக்கியமானவை யென்று கௌடில்யர் கருதுகிறார். ஏனெனில் வடக்கே யிருந்து கம்பளம், தோல், குதிரை முதலிய சாமான்கள் வந்துகொண்டிருந்தன. ஆனால் தெற்கேயிருந்து நவரத்தினங்கள், பொன், சங்குகள் முதலியன வந்து கொண்டிருந்தன. பொன், இரத்தினம் முதலியவைகளை உடைய சுரங்கங்கள் தெற்கே யிருந்தன. இவைகளின் வழியாகவே பாதைகள் சென்றன. இதனால் தெற்குப் பாதைகளில் வியாபாரப் போக்கு வரவும் மனிதர் போக்குவரவும் அதிகமாக நடைபெற்றன. மற்றும் சந்திரகுப்தன் அரசியல் காரணத்திற்காகவும் பாதைகளை அதிகமாக ஏற்படுத்தி யிருந்தான். சத்துருக்களை அடக்குவதற்காக அனுப்பப்படும் இராணுவம் முதலியன இந்தப்பாதைகள் வழியாகவே சென்றன.

பாதைகளும் வியாபார வழிகளும் அவைகளின் உபயோகத்திற்குத் தகுந்தவாறு வெவ்வேறு பெயர்களைக் கொண்டிருந்தன. மற்றும் அவைகள் எந்த இடத்தை முடிவாக அடைகின்றனவோ அதற்குத் தகுந்தாற்போலவும் பெயர்கள் அமைக்கப்பட்டிருந்தன. அரசனால் உபயோகப்படுத்தப்பட்ட பாதை 'இராஜமார்க்கம்' என்று அழைக்கப்பட்டது. இது முப்பத்திரண்டு அடி அகலங்கொண்டதாயிருந்தது. இராஜ்யாதிபதி என்ற முறையில் முக்கியமான சில காலங்களிலேயே அரசன் இப்பாதை வழியாகச் செல்வான். அரசன் செல்லும்போது இராணுவ வீரர்கள் வாளேந்திய கையர்களாய்ப் பாதையின் இருமருங்கும் காவல் புரிந்து நிற்பார்கள். ஜனங்கள், இப்பாதை வழியாகச் செல்லாதபடி அந்தக் காலங்களில் விலக்கப்படுவார்கள். ஒவ்வொரு நகரத்திலும் இத்தகைய ஆறு பாதைகள் இருந்தன என்று சொல்லப்படுகிறது. வடக்கு தெற்காக மூன்றும் கிழக்கு மேற்காக மூன்றும் சென்றன. இரதங்கள் செல்வதற்கென்று முப்பத்திரண்டு அடி அகலமுடைய பாதைகள் இருந்தன. சாதாரணமான கால் நடைகள் செல்வதற்கென்று எட்டு அடி அகலங்கொண்ட (பசுபதம்) பாதைகளும் பெரிய மிருகங்கள் செல்வதற்கென்று (மஹாபசுபதம்) பெரிய பாதைகளும் சிறிய மிருகங்கள் செல்வதற்கென்று நான்கு அடி அகலமுடைய (க்ஷுத்ர பசுபதம்) பாதைகளும் இருந்தன. கழுதைகளும் ஒட்டகங்களும் செல்வதற்கென்று தனியான பாதைகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பாதைகள் எந்தக்காலத்திலும் தேசத்தின் எந்தப் பாகத்தின் வழியாகச் சென்றாலும் ஒரே விதமாக இருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தன. வியாபார நிமித்தம் வண்டிகள் செல்வதற்காகப் பாதைகளும் சில்லரை வியாபாரிகள் செல்வதற்கென்று குறுகிய பாதைகளும் இருந்தன.

பாதைகள் எந்த இடத்திற்குச் சென்று முடிகின்றனவோ அதற்குத் தகுந்தாற்போலவும் பெயரிடப் பட்டிருந்தன. தலை நகரத்திலிருந்து வெளி ஜில்லாக்களுக்குச் செல்லும் பாதைகளுக்கு 'ராஷ்டிர பதம்' என்று பெயர். இவை முப்பத்திரண்டு அடி அகலங்கொண்

டனவா யிருந்தன. மேய்ச்சல் தரைகளை முடிவாகக்கொண்ட (விவீத பதம்) முப்பத்திரண்டு அடி பாதைகளும், பயிர் நிலங்களுக்குச் செல்லும் பாதைகளும், இராணுவஸ்தலத்திற்குச் செல்லும் (வியூஹபதம்) பாதைகளும், சுடுகாட்டுக்குச் செல்வதற்கென்று (ஸ்மஸான பதம்) தனிப்பாதைகளும் இருந்தன. கிராமங்களுக்கும் கிராமங்கள் வழியாகவும் சென்ற பாதைகள் 'கிராமபதம்' என்றழைக் கப்பட்டன. மேற் கூறப்பட்ட பாதைகளில் பெரும்பாலன அறுபத்து நான்கு அடி அகல முடையனவா யிருந்தன. முப்பத்திரண்டு அடி அகலமுடைய வனங்களுக்குச் செல்லும் (வனபதம்) பாதைகளும், யானைகள் வசிக்கும் காடுகளுக்குச் செல்லும் பதினாறு அடி அகல முடைய (ஹஸ்தி க்ஷேத்திரபதம்) பாதைகளும் இருந்தன. மேற் கூறப்பட்டவை தவிர, கோட்டைகளுக்குள் செல்வதற்கென்று சில தனியான பாதைகளும் இருந்தன. கருங்கற்களைப் பூமியில் பரப்பிச் சமமாக்கப்பட்ட பாதைகள் இரதங்கள் செல்வதற்கென்று உபயோகிக்கப்பட்டன. இரண்டு கோபுரங்களுக்கு நடுவே செல்லும் பாதைகளும், கோயிலுக்குச் செல்லும் (தேவபதம்) பாதைகளும் இருந்தன. ஒரே ஆள் செல்லக்கூடிய ஒற்றையடிப் பாதைகளையும் வயல்களுக்கு இடையே செல்லும் பாதைகளையும் அர்த்த சாஸ்திர ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேற் கூறப்பட்ட பாதைகளின் வழியாக ஜனங்களின் போக்குவரவும் வியாபாரப் போக்கு வரவும் எவ்வித தடையுமின்றி நடைபெறுவதற்குரிய எல்லா வசதிகளையும் அரசாங்கத்தார் செய்திருந்தனர். தடை உண்டாக்கினவர் தகுந்த விதமாகத் தண்டனைக் குட்படுத்தப்பட்டனர்.

இனி, அக்காலத்தில், போக்குவரவுக்கு என்னென்ன சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டன வென்பதைப்பற்றிக் கவனிப்போம். இரதங்கள் அப்பொழுது பெரும்பாலனவாக உபயோகிக்கப் பட்டன வென்று தெரிகிறது. பல விதமான இரதங்களை அவ்வப் பொழுது தயாரித்துக் கொடுப்பதற்கென்று 'ரதாத்யட்சன்' என்ற ஓர் உத்தியோகஸ்தன் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருந்தான். இரதங்களில் ஏழுவகைகள் இருந்தன வென்று சொல்லப்படுகிறது. இவை சராசரி பத்து அடி உயர முள்ளனவையாய் இருந்தன. மற்றும் அந்தந்த உபயோகத்திற்குத் தகுந்தமாதிரி ஆறுவித இரதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. கோயில் விக்கிரகங்களை எடுத்துச் செல்வதற்கென்று (தேவரதம்) ஒரு வகை இரதம் இருந்தது. இங்ஙனமே கோயில் திருவிழாக் காலங்களுக்கென்றும், யுத்தத்திற் கென்றும், பிரயாணத்திற் கென்றும் பலவித இரதங்கள் இருந்தன.

சிறிய வாகனங்களில் பல வகைகள் இருந்தன. லகுயானம் என்று சொல்லப் பட்ட சிறிய வண்டி; எருதுகளால் கட்டி இழுக்கப் பட்ட கோலிங்கம் என்ற வண்டி; சகடம் என்று அழைக்கப் பட்ட

பெரிய வண்டி. இந்த வண்டிகளே பெரும் பாலும் உபயோகத்திலிருந்தன. இந்த வண்டிகள் மூலமாகவே வியாபாரத்தின் பெரும் பாகம் நடைபெற்றதாகத் தெரிகிறது. மேற் கூறப்பட்ட இரதங்கள், வண்டிகள் முதலியன ஒட்டகங்களாலும், எருதுகளாலும், குதிரைகளாலும் இழுத்துச் செல்லப்பட்டன. இவை தவிரச் சிவிகைகள் என்று அழைக்கப்பட்ட பல்லக்குகளும் அக்காலத்தில் உபயோகத்திலிருந்தன. பீடிகை என்ற ஒரு வகைப் பல்லக்கும் உபயோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

மன்னன் செல்லும் பாதை அதிக ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அவன் ஒரு குதிரை மீதேறிச் சென்றாலும் இரதத்திலோ அல்லது வேறெந்த வாகனத்திலோ ஏறிச்சென்றாலும் அவனுக்கு எவராலும் எவ்வித தீங்கும் நேரிடாவண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அரசனுடைய வாகனங்களைச் செலுத்துவதற்சென்று பரம்பரையான சாரதிகள் இருந்தார்கள். அரசனுடைய வாகனங்களுக்கோ, அவனால் செலுத்தப்படும் குதிரை முதலானவைகளுக்கோ எவரேனும் தீங்கு செய்தால் அவர் கடுமையான தண்டனைக் குட்படுத்தப் பட்டனர். பாதைகள் எல்லாம் அவ்வப் பொழுது செப்பனிடப்பட்டு வந்தன. இங்ஙனம் செப்பனிடும் வேலையில் முனைந்து நின்ற தொழிலாளர்கள் வரிசெலுத்துவதினின்றும் விலக்கப்பட்டிருந்தார்கள். பாதைகளில் செல்லும் பாதசாரிகளுக்கும் மற்றப் பிரயாணிகளுக்கும் எல்லாவசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. பாதைகளின் இரு மருங்கும் மரங்கள் வளர்க்கப்பட்டு வந்தன; இவைகளின் நிழலில் பிரயாணிகள் இளைப்பாறுவார்கள். தண்ணீர்ப் பந்தல்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப் பட்டிருந்தன. சாப்பாடு வசதிகளும் இரவில் தங்குவதற் கென்று சத்திரங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அசோகனுடைய பாறைச் சாஸனங்களும் இந்தச் சௌகரியங்களைப் பற்றிக் கூறுகின்றன.

இனி ஜலத்தின் வழியாக என்னென்ன போக்கு வரவு சாதனங்கள் இருந்தனவென்பதைக் கவனிப்போம். அக்காலத்தில் தரைமூலமாக எவ்வளவு அதிகமான வியாபாரப் போக்குவரவு நடைபெற்றதோ அவ்வளவு அதிகமாக நீரின் மூலமாகவும் நடைபெற்றதென்று சொல்ல வேண்டும். கால்வாய்கள், நதிகள், சமுத்திரம் முதலியவைகளின் மூலமாக நடைபெற்ற கப்பல் போக்கு வரவுகளையெல்லாம் கவனிப்பதற்கென்று தனியான ஓர் இலாகா இருந்தது. இதில் பல உத்தியோகஸ்தர்கள் வேலை பார்த்து வந்தார்கள். வியாபாரச் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் கொண்டு போவதற்குக் கால்வாய்கள் மிகுந்த சௌகரியமாயிருந்தன. இவைகளின் மூலமாகக் கொண்டு போவது குறைந்த செலவையுடையதாயிருந்தது. சமுத்திரக் கரையோரமாக ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு வியாபாரச் சரக்குகளைக் கொண்டுபோவதும் அப்பொழுதைய வழக்கமாயிருந்தது. இது தவிர

பண்டை இந்தியாவில் போக்குவரவு சாதனங்கள்

சமுத்திரத்தின் மூலமாக அந்நிய நாடுகளுக்கும் வியாபாரம் நடைபெற்று வந்தது. சமுத்திரத்தில் கப்பல்கள் சரியானபடி செல்வதற்காகக் குறித்த சில வழிகள் இருந்தன.

சமுத்திரத்தில் செல்வதற்கென்றும், நதிகளில் செல்வதற் கென்றும், கால்வாய்களில் செல்வதற்கென்றும் கப்பல்களோ, படகுகளோ தனித் தனியாக அமைக்கப் பட்டிருந்தன. சமுத்திரத்தில் செல்லும் கப்பல்கள் க்ஷேத்ரம் என்று அழைக்கப்பட்ட துறைமுகத்தைச் சேர்ந்தவுடன் சுங்கம் செலுத்த வேண்டுமென்ற விதியிருந்தது. வியாபாரச்சரக்குகளை ஏற்றிக் கொண்டு செல்வதற்கென்று தனியான கப்பல்கள் இருந்தன. சமுத்திரத்தில் முத்துச் சலாபம் நடத்துவதற்கென்று தனியான (சங்கமுக்தா கிராஹிணஹ நாவாஹ) கப்பல்கள் இருந்தன. இந்தக் கப்பல்கள் அரசாங்கத்தாருக்கே சொந்தமாக இருந்தன. ஆனால் சில சமயங்களில் தனி வியாபாரிகளுக்கும் இவை வாடகைக்கு விடப்பட்டன. நதிகளில் சென்ற கப்பல்கள் 'மஹா நாவாஹ' என்று அழைக்கப்பட்டன. அரசன் செல்வதற் கென்று தனியான கப்பல் இருந்தது. மிகவும் நம்பிக்கையான மாலுமிகள் இதனைச் செலுத்தினார்கள். இதனுடன் வேறொரு படகு இணைக்கப் பட்டிருந்தது. அரசன் நதியிலோ கால்வாயிலோ சென்றபோது இரு கரைகளிலும் வீரர்கள் காவல்புரிந்து நின்றார்கள். மழை பெய்தவன் பயனாக ஏற்படும் வெள்ளப் பெருக்கில் செல்லச் சிறிய படகுகள் இருந்தன. இந்தச் சிறிய படகுகள் அரசாங்கத்தாருக்குச் சொந்தமானதாகவும், தனி மனிதர்களுக்குச் சொந்தமானதாகவும் இருந்தன. அக்காலத்திலும் கடற் கொள்ளைக்காரர்கள் இருந்தார்களென்று தெரிகிறது. இவர்களுக்குச் சொந்தமாகச் சில கப்பல்களும் இருந்தன. இவைகள் எந்த இடத்தில் அகப்பட்டாலும் அவைகளை உடனே அழித்து விடவேண்டு மென்று கடற் படை இலாகாதார் உத்தரவு செய்திருந்தனர். கப்பல்களைச் செலுத்துவதன் பொருட்டுப் பலவித உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். இப்பொழுது 'காப்டன்' என்று அழைக்கப்படும் உத்தியோகஸ்தன் அப்பொழுது 'சாஸகன்' என்று அழைக்கப்பட்டான். இவன் தவிர நியாமகன் முதலிய பல உத்தியோகஸ்தர்களும் இருந்தார்கள்

கப்பல்கள், படகுகள் முதலியவை தவிர, தண்ணீரைக் கடந்து செல்வதற்கென்று வேறு சில சாதனங்களும் இருந்தன. மரத்துண்டுகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய 'காஷ்ட சங்காதம்' என்ற சாதனமும் மூங்கில்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய 'வேணு சங்காதம்' என்ற சாதனமும் இருந்தன. இவை தவிர, தோலினால் மூடப்பட்ட கூடையும், தோல் பையும், காண்டாமிருகத் தோலினால் செய்யப்பட்ட மிதக்கும் கருவியும், தண்ணீரைக் கடந்து செல்லும் சாதனங்களாக உபயோகப் படுத்தப் பட்டன. ஜலத்தைக் கடப்பதற்குப் பாலங்களும் இருந்தன. படகுகளின் வரிசையும், யானைகளின் வரிசையும் பாலங்களாக உபயோகிக்கப் பட்டன.

கப்பல் கேழ்வை எங்ஙனம் வசூலிப்பதென்பதைப் பற்றியும், கப்பல், படகு முதலியவைகளைப் பழுது பார்ப்பதைப் பற்றியும், எங்தெந்த இடத்தில் எங்தெந்தக் காலத்தில் நதிகளைப் படகுகள் தாண்டலாமென்பதைப் பற்றியும், அந்நிய நாட்டு வியாபாரிகள் இராஜ்ய எல்லைக்குள் பிரவேசிப்பதைப் பற்றியும், சந்தேகிக்கப் பட்டவர்களைக் கைதி செய்வதைப் பற்றியும், கப்பல் கேழ்வை வசூலிப்பதில் சிலருக்குச் சலுகை காட்டவேண்டு மென்பதைப் பற்றியும் விதிகள் ஏற்பட்டிருந்தன. ஸ்வர்ன பூமி(பர்மா)யிலிருந்து ஒரு வித சந்தனமும், சிங்களத்தீவிலிருந்து இரத்தினம், அகில் முதலிய விலையுயர்ந்த சாமான்களும் சீன தேசத்திலிருந்து சிலவகை ஆடைகளும் மகத நாட்டிற்கு வந்து கொண்டிருந்ததாக அர்த்த சாஸ்திரத்திலிருந்து தெரிகிறது.

இதுகாறும் கூறியவாற்ருன், சந்திர குப்தனுடைய ஆட்சிகாலத்தில், போக்கு வரவு சாதனங்களின் மூலமாக ஜனங்களுக்கு எவ்வளவு நன்மைகள் ஏற்பட முடியுமோ அவ்வளவும் ஏற்பட்டிருந்தன வென்பதும், உள் நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் எவ்வளவு தீவிரமாக நடைபெற்று வந்தன வென்பதும், தற்போதையபொதுஜன அபிப்பிராயத்தின்படி, ஒரு நாகரிக அரசாங்கத்தில் குடிகளுக்கு என்னென்ன சௌகரியங்களை நாம் எதிர் பார்க்கலாமோ அவ்வளவு சௌகரியங்களும் ஏறக்குறைய மௌரிய வம்சத்தாருடைய ஆட்சியில் இருந்தன வென்பதும் நன்கு புலனுகும்.

விலை உயர்ந்த மோட்டார் வண்டி.

உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த மோட்டார் வண்டி ஒன்றைப் பாட்டியாலா மகாராஜா 7000 பவுனுக்கு வாங்கியிருக்கிருர். இது 50 குதிரைச் சக்தியுள்ளது. பெரிய வேட்டைக ளாடுவதற்கு இதில் செல்லலாம். வண்டியைத் திருப்ப உள்ள கைப்பிடிச் சக்கரமானது முற்றிலும் தந்தத்திஞல் ஆகியது. பின்னுல் 2 காலன் குடி தண்ணீர் வைக்க வசதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. 4 நாட்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல அதில் வசதியிருக்கின்றது. காட்டின் வழியாக செடி கொடிகளை ஒழித்தும் கிழித்தும் செல்ல இரும்புப் பட்டங்கள் சுற்றிலும் வைக்கப் பட்டிருக்கின்றன. இரவில் காட்டு மிருகங்களைப் பயமுறுத்த இரவெல்லாம் ஊதிக் கொண்டிருக்கக் கூடிய கருவி ஒன்றும் வைக்கப் பட்டிருக்கிறது.

சீன சீட்டித் துணிகளைப் போன்ற துணிகளை இந்தியாவில் நெய்யும் பொருட்டு அவ்விதத் துணிகள் செய்யும் முறையை அயல் நாடு சென்று கற்றுக் கொண்டுவர இஷ்டப்படுகிற இந்தியர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதாக சுதேச சமஸ்தானங்களைச் சேர்ந்த இரண்டு இந்தியச் சீமாட்டிகள் ஸ்ரீமதி சரோஜினி தேவி மூலம் அறிவித்திருக்கிருர்கள்.

சீரிய தேமொழி மணிமலர்

ஸ்ரீரங்கம் தி. ரா. ஸ்ரீநிவாஸன் எழுதியது.

அன்பு.

எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவியே சாலச் சிறந்தது என்பது எவரும் ஒப்ப முடிந்த தொன்று. "அரிதரிது மானிடராத லரிது" என்றனள் நம் தமிழ் மூதாட்டியும். மானிட யாக்கையைப் பெறுதல் பேராழி யொன்றினைக் கையினால் நீந்திக் கரை யேறுத லொக்கும் என ஆன்றோர் கழறினர். பெறற் கரிய இப்பிறவியை எடுத்ததன் பயன் இனியேனும் பிறப் பிறப்பாம் துன்ப மொழித்து வீடு பெறற்கே யன்றோ? பிறப் பிறப்பாம் பரவையைக் கடப்பதற் குரிய வங்கம் ஆகும் இம்மானிட யாக்கையை நல்வழியிற் செலுத் தாது அலக்க ணெய்துவோரின் மதிதான் இருந்தவா றென்னே? மானிடப் பெரும் பிறவி யுற்றதன் பெரும் பயன் எக்காலத்தும் யாவர் பாலும் அன்பு பூண்டொழுகுவதே யாகும்.

> "அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
> கென்போ டியைந்த தொடர்பு"

என நாயனார் கூறியதுங் காண்க. அன்றியும் "அன்பிலா நெஞ்சம் அரும்பிணி" எனவும் மேலோர் கூறுவர். கரந் தெங்கும் பரந்துள இறைவனும் அன்பே வடிவானவன் என்பதைக் குறிக்க,

> "அன்பும் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
> அன்பே சிவமாவ தாரு(ம்) மறிகிலார்
> அன்பே சிவமாவ தாரு மறிந்த பின்
> அன்பே சிவமா யமர்ந் திருப்பாரே"

என்று திருமந்திரத்தில் திருமூலர் அருளியதுங் காண்க. சச்சிதானந் தக் கருணை வள்ளல் யாவரிடமும் அன்பையே எதிர் பார்க்கின்றார். அல்லாமலும் அன்பின் வழியது உலகம். அன்புக்கே உலகம் பணி செய்கின்றது. அன்பென்னும் மென் கயிறு கொண்டே இவ்வுலகம் பிணிக்கப் பட்டுள்ளது. அகில படைப்புப் பொருள்களின் ரமணீய மும் அன்பு ரஸமே ததும்பி நிற்கின்றது. அன்புளோர்க்கே, அருள், பக்தி, பிறப் பிறப்பற்ற பேரின்ப வீடு இவை சித்திக்கும். ஔவைப் பிராட்டியும்,

> "உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
> உடம்பினில் உத்தமனைக் காண்"

எனப் புகன்றனள். அன்பே யுருவான ஈசனை—ஹ்ருதய கமல வாசி யாம் பெருஞ் சோதியை—அன்பின் வழியாகவே காணலாகும். அன் புப் பூண் தரித்தோரின் உள்ளம் தூய்மை யுடையதாய் அன்பு மயமா கவே திகழும். அவர்கள் முகமாகிய தாமரை எப்பொழுதும் அன்பு

ததும்பியதாய்ப் பிரசன்னமாய் விளங்கா நிற்கும். கண்கள் அன்பெனும் தேனுள்ளடக்கிய அன்றலர் அரும்பாய்ப் பொலிவுறும். புன் சிரிப் பெனும் அன்பின் உள்ளக் கிடக்கையைத் தரித்த வண்ணம் பவள மன்ன இதழ் இலங்கும். "அன்புக்கு முண்டோ அடைக்குந் தாழ்?"

அன்னை, தந்தை, ஆசான், அரசன், உடன் பிறந்தோர், உறவினர்; காதலி, தனயன், தேயம், எப்பொருட்கு மிறைவன் ஆகிய இவ்வனை வோரும் உன் அன்பையே எதிர் பார்த்து நிற்கின்றனர். அப்படி யிருக்க, நீ யாது செய்யப் போகின்றனை?

"அன்பின் வழிய துயிர் நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

எனத் தேவர் குறித்தது காண்க. இன்று முதற் கொண்டேனும் யாவ ரிடமும் அன்பு பூண்டொழுக முயல். பிறவி யெடுத்ததன் பேரின்பப் பயன் அதுவே.

***

தூய்மை.

"தூய்மை" என்னும் அரிய பான்மை யாவரிடமும் அமைய வேண்டும். சோதி ரூபமாய் அருட் பெரும் அண்ணல் கோயில் கொண்டுள்ள இல்லமாகிய நம் உடம்பை நாம் பரிசுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது நல்லாகாயம், இன்னுணவு, பரிசுத்த மான நீர், தூய உடை ஆகிய இவைகளால் போற்ற வேண்டும். "சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்திர மெழுத வேண்டும்?" ஆக்கை தூய்மையா யிருந்தால் மட்டும் போதாது. உள்ளே பாசியாம் மாசு படிந்து வெளியே மட்டும் பள பளப்பாக ஒளிரும் கலத்தினுக்கே இது ஒக்கும். உள்ளம் ¡ளங்க மற்றுத் தூய்மை யுடையதா யிருக்க வேண்டும். தூய ஒழுக்கத்தை மேற் கொள்ள வேண்டும். ஆகவே சத்துவ குணம் பரிபூரண மாய் நிரம்பி யிருக்கப் பெறுதல் வேண்டும். பாவ காரிய மொழித்து இன்சொல் கூறவேண்டும். மனம், மொழி, மெய் ஆகிய இவை யாவினும் தூய்மை படியவேண்டும். அப்பொழுது நம்மை எவரும் விரும்பா தொழியார் என்பது திண்ணம். கமலக் கண்ணனது அருட் பார்வையும் நம் மீதுற்று நம்மைப் பேரின்ப வீடுய்க் கும். நமக்கு, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன் களும் ஓர் தூய நோக்கங் கொண்டே சச்சிதானந்தப் பரம் பொரு ளால் அளிக்கப்பட்டுள்ளன. உடம்பு அவனுக் குவந்த தொண்டு புரியவும், வாய் அவனது பீடுறு குணங்களைப் பாடிப் பரவவும், நய னம் அவனது திவ்ய மங்கள விக்கிரக சொரூபத்தைக் கண்டின்புறவும், காது அவனது சீரைச் செவியுறவும் ஆகிய இத்தகைய உயரிய, தூய வினைகளைப் புரிந்து அவனை யடையவே கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனல் அந்தோ! இக்காலத்தோ?............எல்லாம் நேர் மாறாக விருக் கின்றது! ஐம்புலன்களும் எந்நோக்கங் கொண்டு தரப்பட்டனவோ

அவைகளுக்கு அவை பயன் படுத்தப் படாது போயின. இனியேனும் கண்ணன் கருணை காசினியில் ஓங்கி நம்மெல்லோரையும் தூய்மை நெறியிற் செலுத்தி இன்பூட்டு மாக!

***

நிதானம்—கோபம்.

எக்காலத்தும் எவ்விடத்தும் ஆர அமர யோசித்துக் காரியங்களைச் செய்வதே நலம். பதட்ட முடன் ஒரு வினையைத் தவறாக முடித்து விட்டுப் பின்பு வருந்துவதால் பயனென்? "பதறாத காரியம் சிதறாது." "பொறுத்தார் பூமி யாள்வார்" "எண்ணித் துணிக கருமம்..." இவை யாவும் நிதானத்தையே யன்றோ புகழ்ந்து குறிக்கின்றன? "அப்பொழுதே சிறிது யோசித்திருந்தால் இவ்வாறாக முடிந்திருக்காதே" என்று கருமம் முடிந்த பின் கூறி நோவதிற் பய னென்ன?" ஆராயா தான் செய்த காரியம் சாந்தனையும் துயரமே கொடுக்கு மன்றோ? கருதிய காரியம் தீதாக முடியின் சிலருக்குக் கோப மேற்பட்டுப் பக்கத்திலுள்ளோர் யாவருக்கும் இன்னல் விளைப்பது அனுபவம். "நடந்தது நடந்து விட்டது; இனியேனும் சாக்கிரதையா யிருப்போம்" என்று மனதைத் தேற்றிக் கொள்ளாமல், சகிப்புத் தன்மை யில்லாமல், வெகுளலால் காரியம் மேலுந் தீதாகவே முடியுமே யன்றிக் காரியம் வேறுண்டோ? கோபமே, பாபம், சண்டாளம் இவற்றை உதவி, தவத்தைத் தடைக்கும் கொடும் பேய். இதனா லன்றோ, "உள்ளங் கவர்ந் தெழுந் தோங்கு சினங்காத்துக், கொள்ளுங் குணமே குண மென்க" என்றும் "அறிவென்னும் நீரால் ஓங்கு பெருஞ் சினத்தை அவித்தலினும் பிறிதொரு தவமு முளதோ" என்றும் பொருள்படும் வாக்கியங்களையம் மேதையோர் பயந்தனர். "ஆறுவது சினம்" என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்த மொழிகளின் செவ்விதான் என்னே!

"தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்"

"நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற."

ஆகவே சீற்றம் கூற்றினுங் கொடிது. தன்னையே யன்றிப் பிறருக்கும் தீமை விளைத்தலின் அதனைச் "சேர்ந்தாரைக் கொல்லி" எனத் தேவர் கூறினார். கோபத்தாற் கெட்டவர் அனந்தம். ஆகைபால்,

"உள்ளிய வெல்லா முடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின்"

என்ற பொய்யில் புலவர் வாக்குப்படி கோப மொழித்து வேண்டுவன பெற்றுக் களிப்புடன் வாழ்வோமாக. நிதானம்—பொறுமை—அடக்கம்—சாந்தம்—என்னும் ஆபரணத்தைத் தரித்து ஏம முடன் இருப்போமாக.

வீண் செலவு.

'வீண் செலவு' செய்வது தற்காலம் பெரும் பான்மையாரிடம் சகஜமாக இருக்கின்றது. அதனால் துன்பத்திற் கிலக்காயினோர் தொகை மிகவும் அதிகம். எனினும் இத் தூர் வாடிக்கை நம்மவரை விட்டு நீங்காததற்குக் காரணம் ஏதோ அறிகிலம்? வீண் செலவு செய்வது தற்காலம் பிறர் மதிக்கவே மேற் கொள்ளப் படுகின்றது. இதனால், பிதுரார்ஜித சொத்தே யன்றி பிறர் பால் கடன் வாங்கிய தொகையும் செலவழிந்து போகவே,

"ஆன முதலி லதிகம் செலவானால்,
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்,
நல்லார்க்கும் பொல்லனா நாடு"

என்றவாறு அலக்கண் உறுகின்றனர். கடன் கொடுத்தவனைக் காணுந் தோறும் அவர் மனம் திடுக் குறுகின்றது. பொருள்தனைப் போற்றி வாழாமலும், இம்மை மறுமை இவற்றிற் கின்றி யமையாதனவான வழிகளில் செலவிடாமலும், செய்யத்தக்கன வல்லாத காரியங்களில் விரையம் செய்யும் பான்மை யுள்ளோரின் நிலைமை அம்மம்ம! மிகவும் இரங்கத் தக்கதே! இன்னொரு சாரார் அங்கத்தைக் கட்டியும் தங்கத்தைச் சேர்க்கும் குணமுடையோராய், பொருளினால் நுகர்தலான இன்பத்தைத் தாமும் துய்க்காமல், சுற்றத்தார், ஏதிலர் இன்னோருக்கும் பயன் படுத்தாது, "எச்சிற் கையாலும் காக்கை யோட்டாத" லோபிகளாய்ப் பணத்தைப் புதைத்து வைத்துக் களிப்புறுகின்றனர். இத்தகையோர் செய்கையும் வெறுக்கத் தக்கதே. இவர்கள் உயிருடனிருக்கையிலேயே இவர் தம் மைந்தர், பாடு பட்டுத் தேடிய அப் பணத்தைத் தாராளமாய்ச் செலவு செய்வதைக் கண்டு வயிறெரிந்து வாணாளை யொழிக்கின்றனர். இதுவும் இயற்கையின் கூற்றே. ஆகவே, யாவரும் சீருஞ் செட்டு மாய்ப் பணத்தைச் செலவு செய்து வாழவேண்டும். "குந்தித்தின்றால் குன்றும் மாளும்" ஆதலால் பிதுரார்ஜித சொத்தை மட்டும் நம்பி யிருக்காது, சொந்த முயற்சியால் பொருள் தேட முயல வேண்டும். கஷ்டப் பட்டுச் சம்பாதித்தவனொருவனுக்கே பொருளின் அருமை தெரியவரும். கூழே யாயினும் சொந்த முயற்சியால் பெற்றது அறுசுவை யுண்டியாகும். வருவாயை நான்கு கூறாக்கி, இருபாகம் சொந்தச் செலவு கருதியும், ஒரு பாகம் இரவலர்க் கீதற் பொருட்டும் செலவு செய்து, மற்றொரு பாகத்தினை எய்ப்பினில் வைப்புக்காகப் பேண வேண்டும். இம்முறை சிறிது கஷ்ட சாத்தியமே யெனினும் மேற் கொள்ளப் பிரயத்தனஞ் செய்தல் வேண்டும். எக்காரணங் கருதியும் கடன் வாங்காது காரியங்களைச் சமாளித்துக் கொள்ள முற்பட வேண்டும். பொருளைப் பற்றி இம்மட்டே. இத்தேட்ட மேனும் செலவழிந்து விட்டால் சம்பாதித்து விடக் கூடும். ஆனால் இதனினும் சிறந்த பொருள் ஒன்றிருக்கின்றது. அது வீணாகச் செலவு செய்யப் பட்டு விடின் பின்பு பெற

முடியாதது. ஆகவே அதனைப் பயன் படுத்திச் செலவிட வேண்டும. அஃது எது என்பீரேல் அது காலம்—நம் ஆயுட் காலம் என்பதே. கால சக்கரம் இடை விடாமற் சுழன்று கொண்டே யிருக்கின்றது. சூரிய, சந்திராதி நட்சத்திரங்கள் யாவும் தத்தம் வேலையை அன்றாடம் செய்து முடிக்கின்றன. நாம் அறியாமலே ஒவ்வொரு நாளாகக் கடந்து கொண்டிருக் கின்றது. மனிதனுக்கு ஒரு நூறு வருடமே ஆயுட் காலமாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. அதில் ஓர் பாதி துயில் மூலம் கழிந்து விடுகின்றது. முதற் பதினையாண்டு பேதை பாலப் பருவத்தில் நீங்கிவிடுகின்றது. எஞ்சியுள்ள காலமும் பிணி, பசி மூப்பு, துன்பம் இவைகளுக் கிலக்கா யுள்ளது. ஆராய்ந்து பார்ப்பின், எல்லாம் கழிய மிருந்துள்ளது ஒரு சிறு காலமே. அதுவும் இவ்வளவென வரை யறுத்துக் கூற இயலாதது. இப்பவோ, மறு நிமிடமோ, இன்னுஞ் சிறிது காலங் கழித்தோ, எப்பொழுதோ? இக்கூண்டினின்றும் ஆவி நீங்குவது. இவ்வளவு குறுகிய காலத்தில் செய்ய வேண்டிய கருமங்களோ எண்ணிறந்தன! ஆகவே, செவ்வி அருமையைக் கவனியா தொழிதல் மிகுதியும் கேட்டை விளைக்கத்தக்க தன்றோ? பெறற்கரிய மானிடப் பிறவி யெடுத்த தன் பெரும் பயன் பிறப் பிறப் பொழிந்த மறுமைப் பயனுறுவ தல்லவா? ஆகையால் நாம் வந்த வேலை யென்ன? லௌகிக சம்பந்தங்களில் உழன்று வயிற்றை நிரப்புவது ஒன்றே நமது குறியா? ஆதலின் அவைகளில் பெரும் பொழுதை விரையஞ் செய்யாமல் அறநெறி ஏகி, கடவுள் தியானம் மேற்கொண்டு பரலோக நாட்டமே கருதவேண்டும். நாட்டிற்கோ, அன்றித் தன்னை அண்டினோர்க்கோ இயன்றவளவு உதவி செய்து, தண்ணருட் கரும்புயல் வண்ணன் திருவடிக்கே யாளாகு மாறு நம்மை நாமே சீர் திருத்திக் கொள்ளவேண்டும். "Time is very precious. Art is long and time is fleeting." என்ற ஆங்கில வாக்கியங்கள் காலத்தி லருமை குறித்தமை காண்க. ஆகவே யாவரும் பரோபகாரிகளாய் ஒரு நிமிட மேனும் வீண் பொழுது போக்காமல் இம்மையில் "லக்ஷ்மி" கடாட்சத்தையும், மறுமையில் அவள் நாயகன் திருவடி நீழலும் எய்த முயல்வோமாக. எல்லாம் வல்ல ஈசனும் தண்ணருள் மழை பொழிவாராக.

***

நட்பு.

"நட்பு" என்னும் அன்புப் பாசமானது மானிடருள்ளே ஒருவரை யொருவர் ஒன்றுபடப் பிணைப்பதா யிருக்கின்றது. நேசம் மிக்க இரு நண்பர்கள் யாதொரு கவலையும் மனத்திற் கொள்ளாது களிப்புடன் இருக்கின்றனர். காரணம், ஒருவர் மற்றொருவருடைய துன்பமோ சுகமோ இவற்றில் பங்கு பெற்றுக்கொண்டு, ஒருவருக் கொருவர் உதவி புரிந்து கொள்ளுதலேயாம். உத்தம நட்பினைப் பற்றிக் கூறுங்கால்,

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு"

என்று கூறியருளினர் பொய்யா மொழியார். மற்றும் நட்பினியலே விளக்குகையில்,

> " முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
> தகநக நட்பது நட்பு "

எனவும் கழறினர். நண்பன் செல்வ வந்தனா யிருந்த காலத்து அவனுடன் கூடிக் களித்திருந்து விட்டுத் துன்பம் உற்றுழி விட்டு நீங்குவோர் " அற்ற குளத்தின் அரு நீர்ப் பறவை "க்கே ஒப்பாவர். ஆனால் உத்தம நண்பரோ " அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் " போல்வர். கண்ட விடத்து முகஞ் சிரித்துப் பேசலும், இல்லாத விடத்து இகழ்ச்சியாகப் பேசலும் கசடர்கள் கூற்று. ஆனால் உத்தம நேசமோ முகத்தளவோடு மட்டும் நில்லாமல் உளத்துள்ளும் வேரூன்றி யிருக்கும். நட்பினர் எனப்படுவோர்

> " அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
> ணல்ல லுழப்பதா நட்பு "

என்றவாறு தன் நண்பன் யாதானு மொரு தீவினை புரியுங்கால், விலக்கி, அவனுக்குக் கஷ்டம் வந்த காலத்துக் கூடவிருந்து வருந்துவர். மற்றும் இதையே நாலடியார் வேறு விதமாகக் கூறியதன்றி

> " பாலோ டளாய நீர் பாலாகு மல்லாது
> நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்—தேரிற்
> சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
> பெரியார் பெருமையைச் சார்ந்து "

எனவும் கூறினர். நல்லோ ரிணக்கம் புல்லரையும் சான்றோராக்குகின்றது என்பது கருத்து. மற்றும் பாலிற்குள்ள மற்றொரு விசேஷ குணத்தால் நன்னட்பின் திறம் விளக்கலாகும். அஃதென்னெனின் :—

நீரோடு சேர்ந்த பாலை அடுப்பில் வைத்துக் காய்ச்சுகையில் நீர் ஆவியாக மாறி வெளியேறிவிடப் பால் சுண்டுகின்றது. அப்பொழுதே நீரைக் காணாத பால் மிகவும் கலங்கிப் பொங்கி யெழுந்து பாத்திரத்தினின்றும் கீழே வழிந்து அக்கினிப் பிரவேசம் செய்ய நினைக்கின்றது. அத்தருணம் நாம் சிறிது ஜலத்தை அதின் மீது தெளித்தால் "ஓ! நம் நண்பன் உயிர்த் தெழுந்தான் ' எனக் கருதி அடங்கி விடுகின்றது. இஃதே அறிவாளர் நேசப்பான்மையும். இன்னும் நாயினிடம் இயற்கையா யமைந்துள்ள நற்குணமும் நன்னட்பினரிடம் காணப்படும். எஜமானன் தன்னை எவ்வளவுதான் அடித்துத் துன்புறுத்தினாலும் அவன் செய்யும் உபகாரத்தைக் கருதி அவனை விட்டு எவ்வாறு அது அகலாதிருக்கின்றதோ அஃதே போல், நன்னட்பினரும் தமது கிளைகள் ஏதாமொரு தவறிழைத்தாலும் பொருட் படுத்தா தொழிவர். " இருவர் நட்பு ஒருவர் பொறை " யன்றோ?

இனி, நன்னட்பு இட்ட ஞான்று தொட்டு தானாகவே செழித்து வளருந் தன்மையது. இது கருதியே பனைமரத்தின் வளர்ச்சிக் கொப்

பிட்டனர் இதனை மேலோர். பனங்கொட்டை எவ்வாறு யாதொரு பாது காப்பு மின்றித் தானுகவே முளைத்து வளர்ந்து பயன் தருமோ அதே மாதிரி நன்னட்பின ரியல்பும். மாலைக் காலப் பரிதியின் நிழல் போன்றும், வளர்பிறைச் சந்திர னியலை யொத்தும், கரும்பைத் தோகையிலிருந்து சுவைத்தாலெனவும் நன்னட்பு நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டே வரும். ஆகவே நாம் அனைவரும் நன்னட்பே கொள்ளுவோமாக. பிஞ்ஞகன் அருள் புரிவாஞக.

***

மகளிர் கடப்பாடு.

> " பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
> திண்மை யுண்டாகப் பெறின் "

என்று கற்புடைப் பெண்டிரின் சீர் குறித்தனர் நான்முகனுர். "கற்பு"—கல் போன்ற தன்மை, அதாவது அன்னிய ஆடவர் விஷயத்தில் மனம் சலன மற்றிருத்தல் எனவும், கேள்வன் மனைக் கேகு முன் தாய், தந்தை, உற்ருேர், மற்ருேரால் நாயகன்பால் நடந்து கொள்ள வேண்டிய விதங்களைச் செவ்வனே கற்பிக்கப் பட்டிருத்தலாய தன்மை எனவும் இரு வகையாகக் கொள்ளலாகும். இவ்விரண்டும் அமைய வேண்டியது பெண்களுக்கு இன்றியமையாததே. ஒருவனுக்குத் தாரம் வாய்ப்பது பழவினைப் பயனையே பொறுத்துள்ளது.

> " மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
> யெனை மாட்சித் தாயினு மில் "

ஆகவே இல்லறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளோடு கணவன் வரவுக்குத் தக்க செலவு செய்பவளாயுள்ள மனைவியைப் பெறுபவன் பாக்கியமே பாக்கியம்! அத்தகைய பெண்பாவையே அவன் இல்லினுள் இலக்குமி கடாட்சத்தை—அலர் மேல் மங்கை அருளொளியை நிரப்பிப் பொலிவு படுத்துபவள். ஒவ்வொரு மகளிரும் தன் கணவனைப் பேணி அவன் சொற்கடவாத நங்கையா யிலங்கவேண்டும். தத்தம் நாயகரின் வாழ்வைப் பொலிவுறச் செய்வோர் தாங்களே என உணர வேண்டும்.

நற்பெண்டிருக்குக் "கற்பே" இழை யாயிரம் பொன் பெற்ற இந்திர நீலப் பட்டாடையாகும். கணவனிடத்து "அன்பே" பரிமள மிக்க தூமலர் சூடுவதாகும். "நாண்" என்பதே மஞ்சள், வாசனைப் பொடி, மற்றுமுள்ள விலை மதிக்கொணு திலங்கும் இழைகளாகும். நற்குண நற்செய்கைகளே மனைமாட்சியைப் பெருக்குவதாகும். மனைக்கிழத்தி, இல்லாள், என்பன நோக்கி, "இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்பதன் பொருள் உணர்க.

மன்றல் முடிந்ததும் ஒரு நங்கைக்குக் கணவனே, தாய், தந்தை, உற்ருேர், மற்ருேர். அவனே அவள் வழிபடவேண்டிய கடவுளும்.

அவனுக்காவன இன்புறச் செய்வதே அவள் செய்தற்குரிய பணிவிடை. அவனே அவள் சுகத்திற்கோ அன்றித் துக்கத்திற்கோ காரணமானவன்; வாழ்விற்கோ, தாழ்வுக்கோ ஏது வானவன்.

ஆகவே மனைவி யெனப்படுவாள், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் தனது கற்பைப் பாதுகாக்க வல்ல படைகளாகவும் ஐம்புலன்களையும் தான் செய்யக்கருதும் காரியங்களுக்கு அமைச்சராகவுங் கொண்டு கணவனுக்கு இதமானவைகளைச் செய்ய வேண்டும்

"அன்னை தயையு மடியாள் பணியும்
பொன்னினழகும் புவிப்பொறையும்
வேசி துயிலும் விறல் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்."

இதுவே வடமொழியில்,

"கார்யேஷு தாஸீ கருணேஷு மந்த்ரீ
ரூபேஷு லக்ஷ்மீ க்ஷமயாதரத்ரீ
போஜ்யேஷு மாதா சயனேஷு வேஸ்யா
ஷாட்குண்ய தர்மா குலதர்ம பத்நீ"

என வருதல் காண்க.

நாரீமணிகளே! பதிசொற் கடவாத பாவையரா யிலங்கி நாடெங்கும் "லக்ஷ்மி" கடாட்சம் நிறைந் திலங்குமாறு செய்யுங்கள்.

***

சான்றோர் குணம்.

பரிதி தனது செவ்விய கிரணங்களாகும் கைகளால் தாமரை மொட்டுக்களை மலரச் செய்கின்றான். இந்துவோ தன்து தண்ணிய வெள்ளிக்கம்பியன்ன வெளிச்சக் கற்றைகளை அனுப்பிக் குமுதம் விரியுமாறு செய்கின்றனன். புயல் கூட்டங்கள் பரந்த ஆழியி னின்றும் ஜலத்தை முகந்து ஆகாய வீதியில் நின்று மன்பதை மனங் களிக்க மழையை வருஷிக்கின்றன. வாழை, மா, பலா முதலிய தருக்கள் காலந்தவறாது தீங்கனிகளைச் சுமக்கமாட்டாமல் அபரிமிதமாய்த் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. பசுக்கள் புற்றரையில் வயிறுற மேய்ந்து, தூநீர் பருகி ஆவினம் தமது மடியினில் பாலைத் தாங்கிச் சஞ்சரிக்கின்றன. கையானது வாய்க்கு—நாவினுக்கு—இனிய பண்டங்களை நல்குகின்றது. இவையாவும் தம் சுய நலங்கருதிப் பிரதிப் பிரயோஜனம் விரும்பியோ இவ்வாறு நன்மை புரிகின்றன? இது போன்றதே மேலோர் செய்கையும். பிறர் விரும்பா திருக்கையில் தாங்களாகவே வலியச்சென்று பிறருக்கு நன்மை பயக்கும் வினைகளைச் செய்யும் சீரிய குணம் படைத்தோர் சான்றோர்.

***

வாழ்க்கை நிலை

இன்ப நுகர்ச்சிக்கு நோயின் பயமும், உயர் குடிப்பிறப்புக்குத் தாழ்வு நேர்தலும், செல்வத்திற்கு முறை தவிர் கொடுங்கோன் மன்னர், களவு செய்வார், தீ, தாயாதிகள், இன்னோரிடத்து அச்சமும், பீடுறு பதவிக்குத் துரதிர்ஷ்டமும், படைக்குப் பகையாரியும், வனப்புக்கு மூப்பும், நூலுணர்வுக்குக் குதர்க்க வினாவும், சாந்த குணத்திற்குத் தீயோர் பகையும், பிறப்புக்கு இறப்பும், திருப்திக்கு அவாவும், துறவுக்கு மாதரார் விளையாட்டுச் செய்கைகளும், அதிர்ஷ்டத்திற்கு அற்பாயுளும், இராஜாக்களுக்குத் துன்மந்திரிமாரும், நோயின்மைக்கு மனக் கவலையும் ஆக இவ்வாறு இவைகளெல்லாம் எதிரிசளா யிருக்கின்றன. ஆழ்ந்து யோசித்துப் பார்ப்பின் என்னே, வாழ்க்கை நிலை!

முள்ளில்லாத கடிகாரம்.

லண்டனில் புது விதமான ஓர் கடிகாரம் பரீக்ஷை பார்க்கப்பட்டது. அதற்கு முட்கள் கிடையாது. மணி பார்க்கும் இடம் (டயல்) சதுர மாயிருக்கிறது. மணிகளும் நிமிஷங்களும் காட்டும் இரண்டு தட்டுகள் இருக்கின்றன. ஒவ்வொரு நிமிஷத்திற்கும் நிமிஷம் காட்டும் தட்டில் புதிய எண்கள் வந்து விடுகின்றன. ஒவ்வொரு மணி முடிந்ததும் மணி காட்டும் தட்டில் புதிய எண்கள் வந்து விடுகின்றன. மின்சார சக்தியினால் இக்கடிகாரம் நடை பெறுகிறது. தூரத்திலிருந்தே மணியை வெகு இலகுவாகப் பார்த்துக் கொள்ளலாம். 12-30, 12-31, 12-32, என்றிவ்விதமான எழுத்துக்களில் மணி காட்டுகின்றது.

பாடும் மரங்கள்.

மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த மார்படோஸ் என்னும் பிரதேசத்தில் பாடும் மரங்கள் என்ற ஓரினம் இருக்கின்றது. இம்மரங்களின் இலைகள் விசித்திரமா யிருக்கின்றன. இதன் காய்கள் நுனிகளெல்லாம் வெடித்திருக்கின்றன. அவைகளின் மூலமாகக் காற்று விரைவாகச் செல்லுகையில் இனிமையான சப்தம் உண்டாகின்றது. இதிலிருந்தே பாடும் மரங்கள் என்ற பெயர் அதற்கு வந்திருக்கிற தென்று ஊகிக்கப் படுகிறது. இம்மரங்கள் அடர்ந்த பெரும் பள்ளத்தாக்கு ஒன்று அங்கிருக்கின்றது. பருவக்காற்று இப்பள்ளத்தாக்கு வழியாக அடிக்கும் பொழுது இனிமையான சப்தம் அப்பள்ளத்தாக்கினின்றும் உண்டாகிறது.

எகிப்தைச் சேர்ந்த சூடான் பிரதேசத்தில் சவுக்கு இனத்தைச் சேர்ந்த ஓர் வகை மரங்கள் இருக்கின்றன. இம்மரங்கள் பாடும் மரங்கள் எனச் சொல்லப்படுகின்றன.

பண்டைத் தமிழரின்
கைத்தொழிலும் வர்த்தகமும்

இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னமே தமிழ் மக்கள் நாகரிகத்திலும், கைத்தொழிலிலும் ஆட்சித் திறத்திலும் அன்னியதேச வர்த்தகத்திலும் இன்னும் அனேக நாகரிகத் துறைகளிலும் சிறப்புற்றோங்கி நின்றனர் எனில் அது சிலருக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால் புராதன இந்திய சரித்திர ஆராய்ச்சிக் கின்றியமையாதனவான பழைய தமிழ் நூல்களையும் சிலசாஸனங்களையும் ஆராயும் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறிதும் வியப்பாகத் தோன்றாது. சங்க நூல்களையே ஆதாரமாகக்கொண்டு பண்டைத் தமிழரின் கைத்தொழிற் சிறப்பையும், வர்த்தகத்தின் மாட்சியையும் ஆராய்வோம்.

சங்க காலங்களிலும் அதற்கு முன்பும் விவசாயம் தமிழரது கைத்தொழிலாய் இருந்த தென்பது "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாந் தொழு துண்டு பின் செல்பவர்" என்ற குறளால் தெரிகின்றது. இதற்கு அடுத்தது நெசவுத்தொழிலாகும். இது சங்க காலத்தில் விசேஷ விருத்தி யடைந்திருந்த தென்பதும், மகளிர் இத் தொழிலில் மிகவும் தேர்ச்சி அடைந்திருந்தனர் என்பதும் பட்டினாலும், பருத்தியினாலும் எலி மயிரினாலும் வஸ்திரங்கள் செய்யப்பட்டன என்பதும்

"பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய
கனிமயிர் குளிர்ப்பன கண் கொளாதன
எலிமயிர்ப் போர்வை" — சிலப்பதிகாரம்.

என்ற அடிகளாலும், இத்தகைய வஸ்திரங்கள் மிகவும் மெல்லியன வென்பது, 'காம்பு சொலித் தன்ன வறுவை" என்ற சிறு பாணாற்றுப் படை வரியாலும், "புகை விரிந்தன்ன பொங்கு துகிலுடிஇ" என்ற புறச் செய்யுளாலும் "பாம்புரித்தன வாண்பூங் கலிங்கமொடு" என்பதாலும் நன்கு விளங்கும்.

பயிர்த்தொழிலும், நெசவுத்தொழிலும் பண்டைத் தமிழரது முக்கிய கைத்தொழில்கள். எனினும் இன்னும் தமிழ் மக்கள் அனேக தொழில்களையும் கற்றிருந்தனர். இவை மரத்தச்சு, வெண்கலவேலை, இரும்புத்தொழில், சிற்பம், ஓவியம், தங்கவேலை, இரத்தினப்பணி, தையல்வேலை, கோயில் மாளிகைகள் நிர்மாணஞ் செய்தல் முதலியனவாம். இவை சிலப்பதிகாரத்தில் மதுரை அங்காடி வீதியைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வரிகளில் கூறப்பட்டிருக்கின்றன :—

வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையு மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினும் மயிரினு பருத்தி நூலினுங்

பண்டைத் தமிழரின் கைத்தொழிலும் வர்த்தகமும்

கட்டுநுண் வினைக் காருக ரிருக்கையுந்
தூசுந் துகிரு மாரமு மகிலு
மாசறு முத்து மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கை யோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியுங்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலை பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பைந்நிண விலைஞரோ
டோசுநர் செறிந்த வூன்மலி யிருக்கையும்
கஞ்ச காரரும் செம்பு செய்குநரு
மரங்கோ றச்சருங் கருங்கைக் கொல்லருங்
கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும்.

மதுரைக் கடைவீதியில் காணப்பட்ட சாமான்களில் கீழ்வருவன குறிப்பிடத்தக்கன.

"வையமும் பாண்டிலும் மணித்தேர்க் கொடிஞ்சியு
மெய்புகு கவசமு வீழ்மணித் தோட்டியு
மதள்புனை யரணமு மரியா யோகமும்
வளைதரு குழியமும் வால்வெண் கவரியும்
மேனப்படமுங் கிடுகின் படமுங்
கானப்படமுங் காழூன்று கடிகையுஞ்
செம்பிற்செய் நவுங் கஞ்சத் தொழிலவும்."

தமிழ் நாட்டில் சிற்ப வேலைகளிலும் கட்டட மமைப்பதிலும் வட நாட்டாரும் மற்றவரும் ஒருங்கே உழைத்தனர் என்பது.

மகத வினைஞரு மாராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை

என்று மணிமேகலை அடிகளால் புறப்படுகிறது.

இரத்தினப் பணியிலும் பண்டைத் தமிழர் தேர்ச்சி யடைந் திருந்தது இளங்கோவடிகள் எழுதியிருக்கும் மதுரை இரத்தினக் கடைவீதியின் வர்ணனையால் விளங்கும் :—

“ காக பாதமுங் களங்கமும் விந்துவு
மேகையு நீங்கி இயல்பிற் குன்று
நூலவர் நொடிந்த நுழை நுண்கோடி
நால்வகை வருணத்து நலங்கே ழொளியவு
மேகைபு மாலையு மிருளொடு துறந்த
பாசார் மேனிப் பசுங்கதி ரொளியவும்
பதுமமு நீலமு விந்தமும் படிதமும்.”

இதுகாறும் கூறிப் போந்தவற்றால் சங்க காலத்திய தமிழர் கைத் தொழிலின் பல் வேறு கிளைகளில் பெரிதும் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது நன்கு ஏற்படுகிறது. இதன் காரணமாகத் தமிழரின் உள் நாட்டு வர்த்தகமும் அந்நிய நாட்டு வர்த்தகமும் செழித்து வளர்ந்தி ருந்தன. தமிழரின் முக்கியமான துறை முகங்களான புகாரிலும் தொண்டியிலும், கொற்கையிலும் கப்பல்கள் எப்பொழுதும் நிறைந் திருந்தன. காவிரிபூம்பட்டணத்தின் துறைமுகத்தின் முக்கியமான இறக்குமதியைக் குறிப்போம் :—இவை விரிவாகப் பட்டினப்பாலையில் குறிக்கப்பட்டிருக்கின்றன :—

“ நீரின் வந்த நிமிர்பருப் புரவி யுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமு மகிலு
தென்கடல் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப்பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமும்.”

இத்துறைமுகத்தில் கரிகால் வளத்தானின் அரசாங்க உத்தி யோகஸ்தர்கள், தற்கால அரசாங்கங்கள் போலவே சுங்கத் தீர்வை ஏற்றுமதி, இறக்குமதி பண்டங்களின் மீது வசூலித்தா ரென்றும் பட் டினப்பாலை மூலமாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதிகள் மிளகு, பட்டு, முத்து, இரத்தினம் முதலியனவாம். இது,

“ சுள்ளியம் பேர் யாற்று வெண்ணுரை கலங்க சேரலர்
யவனர் தந்த வின் மா ணன்கலம்

பண்டைத் தமிழரின் கைத்தொழிலும் வர்த்தகமும்

பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறியார்ப் பென்ன"

என்ற அகக்குறிப்பால் விளங்குகின்றது.

கி. பி. முதல் நூற்றாண்டு முதல் ஆறும் நூற்றாண்டு வரை தமிழகத்திற்கும் ரோம ராஜ்யத்திற்கும் இடை விடாத வர்த்தகப் போக்கு வரவு இருந்தது. தமிழகத்திலிருந்து ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன இஞ்சி, மிளகு, வாசனைத் திரவியங்கள், வைரம், முத்து பலவித ஆபரணங்கள், பட்டு இவைகள் முக்கியமானவை. இவை சேர பாண்டியப் பிரதேசங்களில் மிகுதியாய் அகப்பட்டன வாதலால் வருஷா வருஷம் ரோமா ராஜ்ஜியத்திற்கு இவை ஏற்றுமதி செய்யப்பட்டன. அக்காலத்திய ரோம நாட்டுப் பெண்டிர் இந்தியரின் முத்திற்கும் இரத்தின விசேஷங்களுக்கும் பட்டாடைக்கும் அதிகப் பிரியம் கொண்டிருந்தனர். பிளினி என்னும் மேனாட்டாசிரியர் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இப்பொருள்கள், ரோமாபுரியின் கடைகளில் இந்தியாவில் விற்கும் விலையை விட நூறு பங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டன வென்றும் வருஷாவருஷம் இந்திய வர்த்தக மூலமாகச் சுமார் 8 லக்ஷம் சவரன், ரோமர் நஷ்ட மடைகின்றன ரென்றும் குறிப்பிட்டிருக்கிறார். அக்காலத்திய இந்திய-ரோம வர்த்தகத்திற்குச் சான்றாக இப்பொழுதும் தமிழ் நாட்டில் பல விடங்களில் ரோம நாணயங்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றன.

ந. ச.

இங்கிலாந்தில் சோமர்செட் நகருக்கருகே ஒரு கிறிஸ்தவ மடத்திலே வாழும் பல சாமியார்கள் சேர்ந்து ஒரு கோயில் கட்டி வருகிறார்கள். அவர்களுக்குள்ளேயே தேர்ந்த சிற்பிகள், தச்சர்கள், ஓவியர்கள், கண்ணாடி வேலைக்காரர், மின்சார நிபுணர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். ஒன்பதாம் நூற்றாண்டில் சாக்ஸனி நாட்டுச் சந்நியாசிகள் அஸ்திவார மிட்டுப்போன ஒரு கோயிலை அவர்கள் தங்கள் கையினாலேயே அழகாகக் கட்டி வருகிறார்கள். நமது சாமிகளிலோ பல சோற்றுச் சாமிகளா யிருக்கின்றன.

ரேடியோவின் அதிசயங்கள்

டாக்டர் சுதீந்திர சந்திர போஸ் எழுதுவது.

நவீன சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாய் இவ்வுலகில் தோன்றியுள்ள அதிசய இயந்திரங்களுள் ரேடியோ தற்போது தலை சிறந்து விளங்குகிறது. அமெரிக்காவில் இந்தக் கருவி தற்காலத்தில் சர்வ சாதாரணமாய் உபயோகிக்கப்பட்டுவருகிறது. பட்டணங்களிலுள்ள பணக்காரர்கள் வீட்டில் தான் இந்த வசதி உண்டென்பதில்லை. கிராமங்களில் ஏழைக் குடியானவர்கள் வீட்டிலும் ரேடியோ கருவியைப் பார்க்கலாம்.

ஒரு வீட்டில் ரேடியோ கருவி இருந்தால் அவ்வீட்டிலுள்ளோர் நாடு முழுவதும் நடக்கும் சம்பவங்களை அந்தந்த நிமிஷத்திலேயே தெரிந்து கொள்ளலாம். கால நிலைமைப் பற்றிய அறிவிப்புகள், மார்க்கெட் விலை விகிதம் இவைகள் அவ்வப்போது தெரிய வரும். ஆயிரம் மைல்களுக் கப்பால் நடக்கும் சங்கீதக் கச்சேரி, அல்லது பிரசங்கத்தை வீட்டி லிருந்த படியே கேட்கலாம். ஒரு கச்சேரி அல்லது பிரசங்கம் நன்று யிரா விட்டால் ரேடியோ கருவியின் சாவியைச் சிறிது தள்ளினால் வேறு கச்சேரி கேட்கலாம். ஏன்? நூறு வெவ்வேறு நாடகம், சங்கீதம், பிரசங்கம் இவைகளில் இஷ்டப் பட்டதை நினைத்த மாத்திரத்தில் கேட்டு ஆனந்திக்கக் கூடும்.

ரேடியோ இயந்திரம் ஐந்து வருஷத்திற்கு முன்பு தான் உபயோகத்திற்கு வந்தது. இன்னும் அது பூரண வளர்ச்சி பெறவில்லை. ஆயினும் இச்சிறு காலத்தில், மோட்டார், ஆகாய விமானம் இந்த இரண்டு தொழில்களையும் விட ரேடியோ தொழில் அதிக அபிவிருத்தியடைந்திருக்கிறது. 1920-ம் வருஷத்தில் அமெரிக்கா ரேடியோ கம்பெனியார் 60 லட்சம் ரூபா பெறுமான ரேடியோ கருவிகள் செய்து விற்றனர். சென்ற வருஷத்தில் 90 லட்சம் பெறுமான கருவிகள் விற்றனர். தற்போது இந்தக் கம்பெனியின் கீழ் இரண்டரை லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். அமெரிக்காவிலுள்ள ஜனங்களில் நூற்றுக்கு ஒருவர் வீதம் இந்தத் தொழிலில் பிழைத்து வருகிறார்கள் என்று கூறுதல் மிகையாகாது.

இந்தத் தேசத்தில், தனிப்பட்டவர்களின் வீடுகளில் அன்றி, கடைகள், உண்டிச்சாலைகள், கலாசாலைகள், தேவாலயங்கள் முதலிய எல்லாப் பொது விடங்களிலும் ரேடியோ கருவிகள் இருக்கின்றன. சங்கீதம், சமாசாரம், கல்வி இவை ஆகாய வெளியில் எப்போதும் வட்ட மிட்டுக் கொண்டிருப்பது போல் தோற்றம் உண்டாகிறது. சென்ற மார்ச்சு மாதத்தில் அமெரிக்கக் குடியரசின் அக்கிராசன பதவியை கூலிட்ஜ் என்பவர் வகித்துத் தமது முதல் பிரசங்கத்தைச் செய்த போது, நான் வாஷிங்டன் நகரிலிருந்து ஆயிரம் மைல் தூரத்தில் இருந்தேன். ஆயினும் அவருடைய பிரசங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் மிகத் தெளிவாகக் கேட்டேன்.

ரேடியோவின் அதிசயங்கள்

ரேடியோ ஸ்டேஷன்கள்.

உலகிலுள்ள வேறெந்த தேசத்தையும் விட அமெரிக்காவில் ரேடியோ அதிகமாய் உபயோகத்தில் இருந்து வருகிறது. அமெரிக்கா ஐக்ய இராஜ்யத்தில் (United States) மட்டும் செய்தி கேட்கும் ரேடியோ கருவிகள் 40 லட்சமும், செய்தி அனுப்பும் ரேடியோ மண்டபங்கள் (Broad-casting Stations) 600-ம் இருக்கின்றன.

நான் வசிக்கும் அயோவா என்னும் சிறு பட்டணத்தில் செய்தி அனுப்பும் ரேடியோ ஸ்டேஷன்கள் மூன்று இருக்கின்றன. நியூயார்க் நகரில் இத்தகைய ஸ்டேஷன்கள் ஐம்பது உண்டு. ஜனங்களின் ஆதரவைப் பெறும் விஷயத்தில் இவைகளுக்குள் பலத்த போட்டி நடை பெறுகின்றது.

செய்தி பரப்பும் அம்சத்தில், ரேடியோ பத்திரிகை உலகத்தைச் சேர்ந்ததா யிருக்கிறது. இந்நாட்டிலுள்ள இருபத்திரண்டு முக்கிய பத்திரிகைகள் சொந்தத்தில் ரேடியோ ஸ்டேஷன்கள் வைத்து நடத்தி வருகின்றன. மற்றும் பல பத்திரிகைகள் பிறர் நடத்தும் ஸ்டேஷன்கள் மூலமாகத் தங்கள் சந்தாதாரர்களுக்குச் செய்தி அனுப்ப ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றன.

செய்தி கேட்கும் ரேடியோ கருவிகளில் பல தினுசுகள் உண்டு. 30 ரூபாவி லிருந்து 1800 ரூபா வரை விலையுள்ள கருவிகள் இருக்கின்றன. கீழ்த்தரமான இயந்திரங்களில் 25 மைல் தூரத்தி லிருந்து வரும் செய்திகள் தான் கேட்கும். ஆனால் விலை அதிகமா யிருந்தால், கேட்கும் சக்தியும் அதிக மிருக்க வேண்டுமென்ற கட்டாய மில்லை. ரேடியோவின் சக்தி, சீதோஷ்ண நிலை, இடையிலுள்ள மலை, காடு முதலிய தடைகள் இவைகளைப் பெரிதும் பொறுத்திருக்கிறது. மழை காலத்தில் ரேடியோவின் சக்தி அதிகமா யிருக்கும்.

காற்று மூலம் கல்வி.

கல்வி அபிவிருத்திக்கு ஓர் அரிய சாதனமாய் ரேடியோ அமெரிக்காவில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. எத்தனையோ ஆடவரும் பெண்டிரும் கல்வி கற்க வேண்டு மென்ற பேரவாக் கொண்டவர்களா யிருப்பினும், போதிய சாவகாசமும் பணமும் இல்லாத தால் கலாசாலைக்குச் சென்று கல்வி கற்க முடியாதவர்களா யிருக்கின்றனர். இத்தகையவர்களும் கல்வி கற்பது சாத்தியமாய் இருக்கும்படி உயர்தர கலாசாலைகள் பல இப்போது ரேடியோ மண்டபங்களை நிர்மாணித்திருக்கின்றன. குறிப்பிட்ட சமயத்தில் இந்த மண்டபத்தில் நின்று ஆசிரியர் பிரசங்கம் செய்வார். ஒருவருக் கொருவர் எவ்வளவோ தூரத்திலுள்ள மாணவர்கள் தங்கள் தங்கள் வீட்டில் இருந்து கொண்டு செய்தி கேட்கும் ரேடியோ கருவியின் உதவியால் பிரசங்கத்தைக் கேட்டுக் கொள்வார்கள்.

கான்ஸாஸ் மாகாணத்து விவசாயக் கலாசாலை அமெரிக்காவிலுள்ள மிகச் சிறந்த கலாசாலைகளில் ஒன்று. ரேடியோ மூலம் கல்வி கற்பிக்கும் முறையைத் திறம்பட நடத்த முதன் முதல் தொடங்கிய

கலாசாலை இதுவே யாகும். ஆதலின் இதற்குக் "காற்றின் மூலம் கல்வி யளிக்கும் கலாசாலை" (Air College) என்ற சிறப்புப் பெயர் வழங்கி வருகிறது. ரேடியோ கருவி ஒன்றுள்ள எந்த மனிதனும் அல்லது எந்தப் பெண்மணியும் இந்தக் கலாசாலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். குறிப்பிட்ட காலம் முடிந்ததும் மாணவர்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கப்படும். ரேடியோ வகுப்பில் சேர்ந்த மாணவர்களிடமிருந்து சம்பளம் எதுவும் வாங்கப்படுவதில்லை.

முக்கியமாய், விவசாயிகளுக்குப் பயன்படக் கூடிய நாற்பது விஷயங்களைப் பற்றி இந்தக் கலாசாலையாரால் போதனை அளிக்கப்படுகிறது. நியூயார்க்கில் வெளியாகும் "பாப்புலர் ரேடியோ" என்னும் பத்திரிகை இந்தக் கலாசாலை நடை முறையைப் பற்றிக் கூறுவதாவது :—

"விவசாயம், நிலம் சம்பந்தமான சட்டங்கள் என்ன, கால் நடை வளர்க்கும் முறை என்ன, குழந்தைகளைப் போஷிக்கும் வகை என்ன வியாபாரக் கடிதம் எழுதும் பான்மை என்ன, இத்தகைய பல விஷயங்களையும் பற்றி ஆண்டு முழுவதும் கற்பிக்கப்படுகிறது. திங்கள், செவ்வாய் இரண்டு கிழமைகளிலும் விவசாயத்தைப் பற்றிய பிரசங்கங்கள். புதன்கிழமை இஞ்சினியருடைய தினம். புது வீடு எவ்வாறு கட்டுவது, தோட்டம் எவ்வாறு அமைப்பது, சாலை எவ்வாறு போடுவது, இத்தகைய பல விஷயங்களைப்பற்றி அன்று பிரசங்கங்கள் செய்யப்படும்.

வியாழக்கிழமை மாலை காது கொடுத்துக் கேட்கும் பெண்மணி ஒருத்தி, குழந்தை அழாமல் எவ்வாறு பார்த்துக் கொள்வது, கணவன் கோபத்தை எவ்வாறு தணிப்பது, பணம் எவ்வாறு மிச்சப் படுத்துவது, பாரிஸ் நகர் மாதிரியில் உடைகள், தொப்பிகள் எவ்வாறு செய்வது என்ற விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

வெள்ளிக்கிழமை யன்று பொது விஷயங்கள். பிரசங்கவன்மை, வியாபாரத்தில் செட்டு, இங்கிலீஷ் சட்டம், இரசாயன சாஸ்திரம், தாவர சாஸ்திரம் இவைகளைப் பற்றி மேதாவிகளால் பிரசங்கம் நடைபெறும்."

ரேடியோவின் மூலமாய் இந்த உலக முழுவதிலும் அறிவைப் பரப்பும் காலம் விரைவில் வருமென்று நான் நம்புகிறேன். இன்று அக்கிராசனர் கூலிட்ஜ் வாஷிங்டன் நகரிலிருந்து ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள் எல்லாரும் கேட்கும்படி பிரசங்கம் செய்யக் கூடும். நாளைய தினம் ஐரோப்பியர் மட்டுமன்றி மற்ற ஐந்து கண்டத்தாரும் கேட்கும் வண்ணம் அவர் பேசக்கூடிய நிலைமை ஏற்படலாம். நாளுக்கு நாள் பெருகும் ரேடியோவின் வலிமையால் உலகில் தூரம் என்பது இல்லாமல் போகும் போது, கல்வி சம்பந்தப் பட்ட வரையில், 25,000 மைல் சுற்றளவுள்ள இந்தப் பெரிய உலகம் ஒரு சிறு கலாசாலை மண்டபமாகவே ஆகிவிடும். நவீன சாஸ்திரத்தினால் ஆகாத காரியம் எதுவுமில்லை போல் காணப்படுகிறது.

இந்தியாவின் பூர்விகச் செல்வ நிலைமை

இந்தியா இக்காலத்தில் உலகத்திலுள்ள தேசங்களெல்லாவற்றிலும் மிக்க எளிய தேசமென்று சொல்லப்படுகின்றது; ஆனால், அது சென்ற காலத்தில் உலகத்திலுள்ள தேசங்களெல்லாவற்றிலும் மிக்க வலிய தேசமாயிருந்தது. விக்கிரக ஆராதனை செய்பவர்களும் கடவுளுடைய விரோதிகளுமான ஹிந்துக்களை மிகுந்த மதிப்போடு நடத்துவதற்குக் காரணமென்னவென்று ஜெஹாங்கிர் சக்ரவர்த்தி இளவரசராயிருந்த காலத்தில் தனது தந்தையாகிய அக்பர் சக்ரவர்த்தியைக் கேட்டபோது, அவர் அவ்வாறு செய்து வந்ததற்குப் பல காரணங்களைக் கூறினார். ஆனால், அக்பர் சக்ரவர்த்தி கூறியவற்றில் ஜெஹாங்கிர் மனத்தில் அழுத்தமாக ஊன்றிய காரணம், சகல வித்தைகளும் கைத்தொழில்களும் சாஸ்திரங்களும் ஹிந்துக்களுடைய கையில் இருந்தனவாதலால் அவர்களை அழிப்பது பெரும் பிழையாயும் நஷ்டமாயும் முடியுமென்பதே.

முகம்மதியர்கள் யுத்தம் செய்யக் கூடும்; ஆனால், அவர்கள் பொருள் வரவு செலவு விவரம் ஒன்றையும் அறியார் என்றும் அக்பர் கூறினார். வித்தைகளையும் கைத்தொழில்களையும் கற்றல் தமது தகுதிக்குத் தாழ்ந்ததென்று நினைத்து முகம்மதியர்கள் அவற்றைக் கல்லாது விட்டு விட்டார்கள். வித்தைகளிலும் கைத்தொழில்களிலும் சாஸ்திரங்களிலும் ஹிந்துக்கள் முகம்மதியர்களைவிட மேம்பட்டிருந்தது மாத்திரமல்லாமல், உலகத்திலுள்ள வேறெந்த ஜாதியாரினும் மேம்பட்டிருந்தார்கள். இந்த மேம்பாட்டினால் தான் இந்தியா தேசம் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் பொன்னைக் கவர்ந்து மிகுந்த செல்வமுள்ள தேசமாயிற்று.

தவிரவும், தங்கம் வெள்ளி முதலிய உலோகச் சுரங்கங்களும், வைரம், வைடூரியம் மாணிக்கம் முதலிய ரத்தினச் சுரங்கங்களும் முத்து பவளம் முதலிய விலையுயர்ந்த மணிகளுள்ள கடல் துறைகளும் ஏராளமாக இந்தியாவில் இருந்தன. உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் செல்வம் இந்தியாவில் புகுந்து கொண்டிருந்தது. இந்தியாவிலுள்ள செல்வம் அதை விட்டு வெளியில் போகாமலிருந்தது. ஏனெனில், அக்காலத்தில் இந்தியாவை எதிர்க்கவோ அல்லது கொள்ளையடிக்கவோ தக்க வலுமையுள்ள ஜாதியார் எவரும் இல்லை. இந்தியாவின் கிழக்குப் பாகத்தில் யாத்திரை செய்த டெரி என்பவர் தமது யாத்திரையைப் பற்றி எழுதியுள்ள (Derry's Voyage) நூலில் கூறியுள்ள பின்வரும் வாக்கியமானது அக்காலத்தில் இந்தியாவில் எவ்வாறு பொன் மிகுந்திருந்ததென்பதைக் காட்டுகின்றது:—"பல நதிகளும் சமுத்திரத்திற்குள் ஓடித் தங்குதல் போல் தங்கமும் வெள்ளியும் இந்தியாவுக்குள் ஓடித் தங்கி; இதர தேசங்களின் ஜனங்கள் தங்களுடைய தங்கக் கட்டிகளையும் வெள்ளிக் கட்டி

களையும் கொண்டுவந்து இந்தியா ஜனங்களிடம் கொடுத்து விட்டு அவர்களிட மிருந்து பல வகையான விலை பொருள்களையும் கைத் தொழிற் பொருள்களையும் வாங்கிக்கொண்டு சென்றார்கள்."

இக்காலத்தில் இங்கிலாந்து தேசம் வியாபார சம்பந்தமாக அடைந்த உன்னத நிலையை அக்காலத்தில் இந்தியா தேசம் அடைந் திருந்தது. என்ன என்ன சரக்குகளில் இந்தியா அவ்வாறு மேம்பா டுற்றிருந்தது? டக்கா 'மஸ்லின்' (ஸல்லாக்கள்,) காஷ்மியர் நாட்டு 'ஷால்' (சால்வைகள்) பட்டுகள், முதலிய எண்ணிறந்த சரக்குகள். இவை தவிரப் பல வகைச் சீட்டித் துணிகளும் இந்தியாவிலிருந்து அமி தமாய் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், மண் பாத்திரத் தொழிலிலும் மரப்பொருள் தொழிலிலும் இந்தியா மற்றத் தேசங்களினும் மேம்பட்டிருந்ததாக நமக்குத் தெரிய வில்லை. லுடோ விஸ்டி வார்த்திமா என்னும் ஐரோப்பியர் தமது யாத்திரைகளைப் பற்றி எழுதியுள்ள நூலில் "நான் பார்த்த எல்லா வியாபாரிகளிலும் செல் வம் மிக்கவர்கள் இந்தியாவி லிருக்கிறார்கள். இதர தேசங்களைக் காட்டி லும் இங்கே பல வகைத் தானியங்களும் சர்க்கரையும் இஞ்சியும் பருத்தியும் ஏராளமாய் நிரம்பி யிருக்கின்றன. ஒவ்வொரு வருஷத்தி லும் ஐம்பது கப்பல்கள் நிறையப் பருத்தித் துணிகளும் பட்டுத் துணி களும் இத்தேசத்திலிருந்து அந்நிய தேசங்களுக்குச் செல்லுகின் றன."

மான்டி மான்ஸ்டார்ட் என்பவர் "உலகத்தில் பல பாகங்களில் செய் யப்படும் மரப் பெட்டிகளை விட மிகவும் அழகும் உறுதியும் வாய்ந்த மரப் பெட்டிகள் அங்குச் செய்யப்படுகின்றன' என்கிறார். எம்.பெர்னிய என்பவர் மெக்ஸிகோ தேசத்து வெள்ளியும் பெரு தேசத்துத் தங்க மும் சிறிது காலம் ஐரோப்பா கண்டத்திலும் ஆசியாகண்டத்திலும் நடமாடி விட்டுப் பின்னர் இந்தியாவுக்குப் போய்ச் சேருகின்றன; அங் கிருந்து அவை ஒரு போதும் வெளி யேறுவதில்லை" என்கிறார். ஆத லால் அக்பர் சக்கரவர்த்தி ஹிந்துக்களை வருத்துதல் கூடாதென்று ஜெஹாங்கிருக்குப் புத்தி சொன்னார்; ஜெஹாங்கிரும் அப்புத்தியைச் சரி யென்று உட்கொண்டு நடந்தார். மொகலாயர் இந்தியாவுக்கு வரு முன்னர் ஆப்கானிஸ்தானத்துக் குறவர்கள் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்து மலை மலையாகத் தங்கத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு போனார்கள். அவர்கள் அவ்வாறு இந்தியா தேசத்துத் தங் கத்தை மலை மலையாகக்கொண்டு போயும் இந்தியாவில் பின்னும் ஏராள மாகத் தங்கம் இருந்தது. மொகலாயர் இந்தியாவுக்கு வந்த போது இந்தியாவானது உலகத்திலுள்ள மற்றெந்த தேசத்தினும் அதிகச் செல்வமுடைய தாகவே யிருந்தது. அக்காலத்தில் இந்தியாவில் தங்கமானது இக்காலத்தில் செம்பு மதிக்கப்படுகிறபடியே மதிக்கப் பட்டு வந்தது.

ஜெஹாங்கிர் தமது சரித்திரத்தில் எழுதியுள்ள பின் வரும் விஷ யங்கள் இந்தியாவானது அவருடைய காலத்தில் எவ்வளவு செல்வ

21035

முடைய தாயிருந்த தென்பதைக் காட்டும். "சேனாதிபதியாகிய மான்சிங் என்பவர் சக்ரவர்த்தியைப் பார்க்க வந்த ஒவ்வொரு சமயத்திலும் பதினெட்டு லக்ஷ ரூபாய் காணிக்கை கொண்டு வரக் கடமைப் பட்டிருந்தார்; அவ்வாறு அவர் வருஷத்திற்கு இரண்டு முறைக்குக் குறையாமல் வருவது உண்டு. "விக்கிரமாதித்த மகா ராஜன் தனது நகரத்தின் காசுக் கடைகளில் தொண்ணூறு கோடி ரூபாய் கொடுத்து வைத்திருந்தாராம். இக்கணக்கு உத்தேசமாகக் கணிக்கப் பட்டதென்று வைத்துக் கொண்டாலும், இக்காலத்தில் லக்ஷாதிபதிகளைக் காண்பது அருமையாயிருப்பது போல அக்காலத்தில் கோடீஸ்வரர்களைக் காண்பது அருமையா யிருந்த தில்லை யென்பது மாத்திரம் சந்தேகமற்ற விஷயம். அக்பர் சக்கரவர்த்தி யிடமிருந்து ஜெஹாங்கிர் அடைந்த சிம்மாசனத்தை அலங்கரிப்பதற்கு மாத்திரம் மூன்று கோடி ரூபாய் செலவாயிற்று. ஒவ்வொன்று பதினைந்து லக்ஷ ரூபாய் விலையுள்ள பன்னிரண்டு வைரக் கற்கள் அச்சிம்மாதனத்தில் பதிக்கப்பட்டன. ஆக்ரா நகரின் கோட்டை ஒன்றுக்கு மாத்திரம் இருபத்தி நாலு கோடியே ஐம்பத்தாறு ரூபாய் செலவாயிற்று.

ஜெஹாங்கிர் தமது சரித்திரத்தில் தமது அந்தப்புரச் செலவுகளுக்கும் தமது அரண்மனை சிப்பந்திச் செலவுகளுக்கும் மாத்திரம் வருஷந்தோறும் பதினைந்து கோடியே பன்னிரண்டு லக்ஷம் ரூபாய் பிடித்ததாகக் குறித்திருக்கிறார். அவர் நூர்ஜிஹானை விவாகம் செய்த போது அவ்வரசிக்கு நகைகளுக்கு மாத்திரம் ஏழு கோடியே இருபது லக்ஷம் கொடுத்தார். அவளுடைய முத்து மாலையில் ஒவ்வொன்று ஐம்பதினாயிரம் ரூபாய் விலையுள்ள நாற்பது முத்துக்கள் அடங்கி யிருந்தன. அவருடைய மருமக்களில் ஒருத்திக்கு ஒவ்வொன்றும் பதினாயிரம் ரூபாய் விலையுள்ள அறுபது முத்துக்களடங்கிய முத்தார மொன்று இனமாக அளித்தார். அவருடைய தம்பியாகிய தானியெல் என்பவர் தக்ஷண தேசத்தில் வசித்திருந்தார். அவர் இறந்த பின் அவருடைய உடைமைகள் ஆக்ரா நகருக்குக் கொண்டு வரப் பட்டன. அவை மதிப்புக் கடங்காத விலை பெற்றவை. அவர் சரீரத்தில் அணிந்திருந்த நகைகள் மாத்திரம் நாற்பத்தைந்து கோடி ரூபாய் விலை பெறு மென்று மதிப்பிடப் பட்டன. அக்பர் தாம் சேர்த்து வைத்திருந்த திரவியம் எவ்வள விருக்கு மென்று பார்க்கக் கருதி முதலில் தமது பொக்கிஷத்தி லிருந்த தங்கத்தை நிறுத்துக் கணக்குத் தயாரித்துத் தமக்குக் கொடுக்கும் படியாகக் கிலிட்ஜி கானுக்கு உத்தரவு செய்தார். அத்தங்கத்தைக் கணக்கிட்ட விவரத்தைப் பற்றிப் பின் வருமாறு தமது சரித்திரத்தில் ஜெஹாங்கிர் எழுதியுள்ளார்:—"அவ்வுத்தியோகஸ்தர் (கிலிட்ஜிகான்) 'ஆக்ரா' நகர் பொக்கிஷ சாலையி லிருந்த தங்கத்தை விலைமதிப்ப தற்காக நிறுக்கத் தொடங்கினார். அந்நகரிலுள்ள பல வியாபாரிகளிட மிருந்து நானூறு ஜோடி பெரிய தராசுகள் தருவித்து அவற்றால் ஐந்து மாதம் இரவும் பகலும் இடை விடாமல் தங்க நாணயங்களையும் தங்கக் கட்டிகளையும் நிறுக்கும்படி செய்தார். ஐந்து மாதம் கழிந்தவுடன் எனது தகப்பனார் எத்தனை மணங்கு தங்கம்

பொக்கிஷத்தில் இருந்த தென்று தெரிந்து வரும்படி அவ்வுத்தியோ கஸ்தருக்கு ஆளனுப்பினார். ஐந்து மாதம் இரவும் பகலும் இடைவிடாது ஆயிரம் மனிதர் நானூறு ஜோடி தராசுகளைக் கொண்டு ஒரு பொக்கிஷ அறையின் தங்கத்தை மாத்திரம் நிறுத்துக் கொண்டு வந்ததில் அத்தங்கம் முழுவதும் நிறுத்து முடிவாகவில்லை யென்று அவ்வுத்தியோகஸ்தர் பதில் அனுப்பினார். அதன் பின்னர் எனது தகப்பனார் நிறுக்கும் வேலையை அம்மட்டில், நிறுத்தும் படிக்கும், நிறுக்கப்பட்ட தங்கங்களை அதனதன் இடத்தில் வைத்து அரங்கைப் பூட்டி முத்திரை வைக்கும் படிக்கும் உத்தரவு செய்தார். இஃது ஒரு நகரின் ஒரு பொக்கிஷ சாலையிலிருந்த தங்கத்தைப் பற்றி நடந்த காரியம்."

இந்தியா தேசத்து ஜனங்கள் மோகல் அரசாட்சியில் அடைந்திராத சமாதானத்தையும் பாதுகாப்பையும் பிரிட்டீஷ் அரசாட்சியில் அடைந்திருக்கிறார்கள். அக்காலத்தில் சகல அதிகாரங்களும் ஒரு மனிதனிடத்தில் இருந்தன; அதனால் குற்ற மற்ற மனிதரும் குற்றம் செய்ததாகத் தண்டனை யடைதல் கூடும். ஆனால், மோகல் அரசர் இந்தியாவைத் தமது வாசஸ்தலமாகக் கொண்டிருந்தனர்; தூர தேசங்களில் தமது சொந்த வாசஸ்தலங்களைக் கொண்டு இரை கவர வரும் பறவைகளைப் போல அவ்வரசர் தூர தேசங்களில் தமது வாசஸ்தலங்களைக் கொண்டிருக்கவில்லை. இந்தியா தற்காலத் துரைத்தனத்தாருக்கு ஓர் அந்நிய தேசமாயிருப்பது போல அவ்வரசருக்கு அந்நிய தேசமா ருயிக்கவில்லை. ஆதலால், அக்காலத்தில் இந்தியாவிலிருந்து பணம் அந்நிய தேசத்திற்குப் போகவில்லை. முகம்மதிய அரசாட்சியில் இந்தியா அளவு கடந்த செல்வ நிலைமையில் இருந்ததற்கு முக்கிய காரணம் இதுவே.

இங்கிலாந்தில் மாத் நகரத்து நகராட்சி சபைத்தலைவரின் மனைவி ஒரு விருந்தில் 2500-பேர்களைக் கைகுலுக்கி வரவேற்க நேர்ந்ததால் கை புண்ணாய் விட்டது. சிலர் மிகவும் உற்சாகமாகக் கை குலுக்கினார்கள். அந்த விருந்து முடிவதற்குள் அம்மாள் கை புண்ணாய்ப் போய்விட்டது. இனிக் கை குலுக்கும் வழக்கத்தை விட்டு விடலாமென்று அந்த அம்மையார் யோசனை சொல்லுகிறார். வேல்ஸ் இளவரசருக்கும் சில வருஷங்களுக்கு முன் பலருடன் கை குலுக்கியதால், இவ்வாறு கை கெட்டுப்போய் விட்டது. "லோகோபகாரி".

கணித மேதாவி

ஸ்ரீமான் சோமேச சந்திர வசு

மனக் கணக்கு போடுவதிலும் ஞாபக சக்தியிலும் உலகில் தமக்கு நிகர் இல்லை என்று சொல்லும்படி ஆற்றல் படைத்த ஸ்ரீமான் சோமேச சந்திரவசு உலக முழுவதிலும் சுற்றித் தமது திறமைகளைக் காட்டிய பின்னர் வங்காளத்துக்குத் திரும்பியுள்ளார் என்று 'இங்கிலீஷ்மன்' பத்திரிகை கூறுகிறது. அவரைப்பற்றி அடியிற்கண்ட விவரங்களும் மேற்படி பத்திரிகையில் காணப்படுகின்றன. ஸ்ரீமான் வஸு தமது குழந்தைப் பருவத்திலேயே அபார ஞாபக சக்தி உடையவரா யிருந்தாராம். எட்டாவது வயதில், காகிதம் பென்சில் உதவியின்றி 14 இலக்கங்கள் உள்ள இரண்டு எண்களை மனதினாலேயே பெருக்கிச் சொல்வாராம். பின் இந்த ஞாபக சக்தியை மேலும் விருத்தி செய்து ஒவ்வொன்றிலும் 60 இலக்கங்களுள்ள இரண்டு எண்களை மனதினால் பெருக்கிச் சொல்லும் திறமை பெற்றார்.

எதாவது ஒரு வருஷத்தில் ஒரு தேதியைக் குறிப்பிட்டு அன்று என்ன கிழமை என்று கேட்டால் அவர் ஒரு நொடியில் பதில் அளிப்பார். இதற்காக அவர் சொந்தமாய் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறார். ஞாபக சக்தி, மனோதுரிதம், ஏகாக்ர சித்தம், பொறுமை இக்குணங்களிருந்தால் மனக் கணிதத்தில் சித்தி யடையலா மென்று அவர் சொல்லுகிறார். கணக்குப் போடும் போது அவரைச் சுற்றிப் பல ஜனங்கள் நின்று கொண்டு கூச்சல் போட்டாலும் அவர் கணக்குத் தவறுவதில்லை. அவர் கணக்குப் போடும்போது, அவர் மனக்கண்ணின் முன்பு காகிதத்தில் எழுதப்பட்டன போலவே எண்கள் வரிசை வரிசையாக நிற்குமாம்.

இங்கிலாந்தில் இவர் ஒவ்வொன்றிலும் 40 இலக்கங்களுள்ள இரண்டு பெரும் எண்களை 25 நிமிஷத்தில் மனதினால் பெருக்கிச் சொன்னார். அமெரிக்காவில் 60 இலக்கங்களுள்ள இரண்டு எண்களை 45 நிமிஷத்தில் பெருக்கிச் சொன்னார். பாரிஸ் நகரில் அவரைப் பின்வரும் கேள்வி கேட்கப்பட்டது :—1873-ம் வருஷம் டிசம்பர் மாதம் 24-ந் தேதியிலிருந்து, 1924-ம் வருஷம் பிப்ரவரி 26-உ காலை பத்து மணி வரையில் எத்தனை வினாடிகள் ? இதற்கு 27 வினாடியில் விடை கூறினாராம்.

அவர் தினம் மூன்று சேர் பால் மட்டும் சாப்பிட்டு வருகிறார். இதனால் அவர் தேகம் மெலிந்திருந்தாலும் மூளை தெளிவாக இருக்கிறது. பிரதி வாரமும் திங்கட்கிழமை யன்று அவர் காலஞ்சென்ற தமது மனைவியின் ஞாபகார்த்தமாக விரதம் இருக்கிறார். மற்ற ஒவ்வொரு நாளும் அவர் இரவு 11 மணி முதல் காலை 2 மணி வரையில் மூன்று மணி நேரம் மட்டும் தூங்குகிறார்.

பத்திராதிபர் குறிப்புகள்

காந்தியின் ஜென்ம தினம்.

அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி நாடெங்கும் மகாத்மாவின் ஜென்ம தினம் வெகு குதூகலமாய்க் கொண்டாடப் பட்டது. காந்தியடிகள் நம் நாட்டில் அவதரித்தது நம் முன்னோர்கள் செய்த தவப் பயனே யாகும். காந்தியடிகளின் திட்டத்தைச் சரிவர உண்மைத் தியாகத்துடன் தலைவர்கள் நடத்தி யிருந்தால் நினைத்த பொருள் நிச்சயமாய்க் கிடைத்திருக்கு மென்பதற்குச் சந்தேக மில்லை. ஆனால் தற்சமயத்திலோ—நாட்டில்—இந்திய தேசத்தில் தியாக மென்றால், முன் வைத்த காலைப் பின் எடுக்கிறார்கள். இந்தியருக்குப் பொதுவாக—தமிழனுக்குச் சிறப்பாக ஆண்மை குறைந்து வருகிறது. வாய்ப் பேச்சு மட்டும் பெருகி வருகிறது.

காந்தியடிகளின் தெய்வீக இயக்கம் நாட்டில் மின்சாரத்தைப் போல் பரவி யிருந்த காலை உண்மையில் அஹிம்ஸா தர்மம் கையாளப் பட்டது. கொலைகளும், கொள்ளைகளும் குறைந்திருந்தன. குடியர்களின் எண்ணிக்கை குறைந்தது. கலால் வரி எல்லா மாகாணங்களிலும் ஒன்றுக்குப் பாதியாயிற்று. லங்காஷையர், மான்செஸ்டரின் நூல் மூட்டைகளின் இறக்குமதி மிகவும் க்ஷீணித்தது. ஆலைகள் மூடப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தன. தேசத்தவர்கள் சாதாரண ஆடம்பர மற்ற வாழ்வைக் கருதினார்கள். டம்பத்தை வெறுத்து வந்தார்கள் எவ்வளவு பணக்காரனாயினும் ஒத்துழைத்து ஜோஹுக்குமா யிருந்தாலும் ஆங்கிலேய உடை தரிப்ப தென்றால் அக்காலத்தில் சிறிது நாணமும் அச்சமுமா யிருந்தது. நமது வாலிப இளைஞர்களின் முகத்தில் உண்மைத் தேச பக்தி ஜொலித்தது. நாட்டின் விடுதலையின் அவா மிகுந்திருந்தது. தீண்டாமை என்ற கொடிய சாபத்தை நாட்டை விட்டுத் தொலைக்க வேண்டு மென்ற உண்மை எண்ணம் சகல வகுப்பாரிடமும் உதித்திருந்தது. அச்சமயத்தி லிருந்த ஊக்கமும், உண்மை உழைப்பும் ஜனங்கள் கொண்டிருந்த தேசிய நினைப்பும் பரபரப்பும் இனி எப்பொழுதாவது நாட்டில் பார்க்க முடியுமோ வென்று கூட நினைக்க வேண்டி யிருக்கிறது.

ஒத்துழையா இயக்கம் காந்தியடிகளால் ஆரம்பிப்பதற்கு முன் காங்கிரஸ் கிருஸ்துமஸ் விடு முறையைக் கழிக்கும் ஸ்தலமா யிருந்தது. அவ் விடுமுறையில் நாட்டிலுள்ள செல்வாக்குப் படைத்தவர்கள் ஒரு இடத்தில் கூடுவதும் சில பிரச்னைகளைப் பேசி முடிப்பதும், அரசருக்கும் ராஜப் பிரதி நிதிக்கும் தந்தி யடித்து விட்டுத் திரும்புவதாக நடந்து வந்தது. அந்நாளிலும் நாட்டிற்குப் புத்துயிர் அளித்த பல மகான்கள் காங்கிரஸில் இல்லாம லில்லை. அவர்களின் திருநாமத்தை மறக்க முடியாது.

பத்திராதிபர் குறிப்புகள்

காந்தியடிகள் தெய்வீக ஒத்துழையா இயக்கம் ஆரம்பித்ததும் காங்கிரஸ்-உண்மைத் தேசீய காங்கிரஸ்—ஜனங்களின்—ஏழைகளின் பொதுக் காங்கிரஸாக மாறிற்று. உண்மைத் தியாகிகளுக்கு மட்டுமே அதில் இடம் கிடைத்தது. சுகவாசிகளும், சாய்ப்பு நாற்காலியி லிருந்து கொண்டே சுயராஜ்யம் வாங்கலா மென்று, நம்பிக்கை வைத்திருந்த சகோதரர்களும் பிரிந்து போக நேர்ந்தது.

காந்தியடிகளின் வார்த்தையை அந்நாளில் இமய முதல் குமரி வரை ஜனங்கள் பக்தி யுடன் கவனித்தார்கள். சத்தியாகிரஹம் ரௌலட் சட்டத்திற்காக ஆரம்பித்ததும், அன்று, இமய முதல் குமரி வரை வேலை நிறுத்தம் செய்ததைப் பார்த்து இந்தியா கவர்ண் மெண்டு திடுக்கிட்டுப் போனதாகப் பண்டித மாளவியா ஒரு சொற் பொழிவில் சொல்லி யிருக்கிறார். அந்நாளில் பணக்காரர், ஏழை, படித்தவர், படிப்பில்லாதவர், இளைஞர்கள், ஸ்திரீகள், வயது முதிர்ந்த அன்னை மார்கள், தொண்டர் படையில் சேர்ந்து அணிவகுத்துக் காரா கிரஹம் புன் சிரிப்புடன் சென்றதைப் பார்த்தவர்கள் நம் நாடும் சுயேட்சை யடைந்து, ஜெப்பான் முதலிய அந்நிய நாடுகளைப் போல் சுய அந்தஸ்துப் பெறப் போகிற தென்று குதூகுலப் பட்டார்கள். தலைவர்களும் தொண்டர்களும் எத்தனை முறை சிறை சென்றார்கள்? மன்னிப்புக் கேட்டுத் திரும்பவும் துன்பப் படுத்த வில்லையா? கேட்டனரோ! அவர்கள் அதற்கு விடுத்த விடையை நாம் மறக்க முடியுமோ? இப்பொழுது ஜனங்களிடமும், தலைவர்களிடமும், தியா கமும், தேச பக்தியும் முன்போல் இருப்பதாக எண்ண முடியுமா? நேயர்களே சிந்தனை செய்யுங்கள்.

நாட்டில் முன்னிருந்த ஒற்றுமை இன்று எங்கு போயிற்று! ஜனங்களிடம் தேச பக்தி குறைந்து போனதற்குக் காரண மென்ன? தற்சமயம் ஜனங்களிடம் சாத்வீக எண்ணங்கள் குறைந்து வருவா னேன்?

இன்றோ, யார் செய்த பாபமோ, திரும்பவும் தற்கால நாகரீகம் தலை விரித்தாட ஆரம்பித்திருக்கிறது. குடியோ பெருகி விட்டது கொலைகளும், கொள்ளைகளும் வட இந்தியாவில் திரும்பவும் தலை காட்டுமோ வென அஞ்ச வேண்டி யிருக்கிறது. சீமை வியாபாரமோ நூல் துணி வந்த தோடு நிற்காமல், நமது புராதன கைத்தொழிலான பட்டுக்கும் போட்டி வந்து விட்டது. இத்தொழிலும் நசுக்கப் பட லாம். இமிட்டேஷன் பட்டென ஒரு விதமான பட்டைப் போல் பாலிஷ் கொடுத்த நாரினால் செய்யப் பட்ட புடவைகளும், வேஷ்டி களும் தயாராய் வந்து நாட்டில் குவிந்து விட்டன. ஏராளமாய் ஜனங் களும் வாங்கி வருகிறார்கள். தேசத்தவர்களும் ஆடம்பர வாழ்வில் கருத்தைச் செலுத்த ஆரம்பித்து விட்டார்கள். ஆங்கில ஆடை அணிவது, கௌரவ மெனத் தலைவரென்று சொல்லப் படுவோர்களில் சிலர் நினைக்க ஆரம்பித்து விட்டார்களானால், சாதாரண ஜனங்களைப்

பற்றி சொல்லவும் வேண்டுமா? தீண்டாமை பேச்சளவில் நின்று விட்டது. வகுப்புச் சச்சரவும் போராட்டமும் பெருகி வருகிறது. காந்தியடிகளைத் தூஷிப்பதற் கெனச் சமூகப் பத்திரிகைகள் சில தலை காட்டி யிருக்கின்றன. நமது தேசியத் தொழிலென சொல்லக் கூடிய பம்பாய் ஆலைகளுக்கும் சனியன் பிடித்திருக்கிறது. போட்டியோ பலமா யிருக்கிறது. தலைவர்கள் உண்மை உழைப்புடன், தியாகபுத்தி யுடன் பிரசாரம் செய்து வந்திருந்தால் மேல் கண்ட விஷயங்கள் தலை விரித்தாட நியாய மில்லை. தலைவர்களின் அபிப்பிராய பேதமும், சட்ட சபையின் மோகமுமே நாட்டின் தற்கால நித்திரைக்குக் காரணமென்பது நமது அபிப்பிராயம்.

காந்தியடிகளின் திட்டங்கள் ஒன்றன் பின் ஒன்ருய்ப் போராடி நசுக்கப்பட்டுப் போயின. முடிவில் பாடலி புரத்தில் கதரின் பெரு மையையும் அவசியத்தையும் குறைத்து விட்டார்கள். இனி நூல் நூற்க வேண்டியதும், கதர் கட்ட வேண்டியதும் காங்கிரஸ் அங்கத் தவர்களின் முக்கிய கடமை யில்லை யென முடிந்தது. காந்தியடி களுக்கு இவ்விஷயம் எவ்வளவு துக்கத்தைக் கொடுத்திருக்கு மென நாம் சொல்ல வேண்டிய தில்லை. எனினும் சாந்த மூர்த்தியும் தியாக மூர்த்தியுமான சபர்மதி முனிவர் பாடலி புரத்தில் நடந்து கொண்டது இதர செல்வமும் கீர்த்தியும் படைத்தத் தலைவர்களுக்கு நல்ல படிப்பினையாக இருத்தல் வேண்டும்.

காந்தியடிகளின் திட்டமே திரும்பவும் உயிர்ப்பிக்கப் படு மென் பது நமது நம்பிக்கை. அவரால் தான் நாட்டுக்கு நன்மை ஏற்படும். விடுதலை உண்டாகும். தலைவர்கள் திரும்பவும் ஒன்று சேர்ந்து ஒத்து ழைத்துத் தெய்வீக இயக்கத்தை நாட்டில் பரப்பி நாட்டைப் புனித மாக்க வேண்டு மென்று தலைவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

மகாத்மா வெகு கால மிருந்து; தான் ஜெனித்த பாரத நாட்டிற் கும் ஏழை மக்கட்கும் அவர் விரும்புகிறபடி நன்மை செய்து முடிக்க எல்லா வல்ல இறைவ னடிகளை இறைஞ்சுகிறோம். காந்தி யடிகள் வாழ்க! பாரத நாடு வாழ்க!

ஸ்ரீமான் அ. மாதவய்யா.

“பஞ்சாமிர்தம்” பத்திராதிபரும் உண்மை ஆசார சீர்திருத்தக் காரருமான நண்பர் மாதவய்யா சென்ற 22-10-25 வியாழனன்று மாலை நாலு மணிக்கு செனட் சபைக் கூட்டத்திற்குச் சென்றிருந்த பொழுது மூளைக் கொதிப்பால் கீழே விழுந்து மரண மடைந்தா ரென் பதைத் துக்கத்துடன் தெரிவிக்கிறோம். மாதவய்யா ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல பயிற்சியுள்ளவர். இவர் தமிழ் வசன நடையும், பாடலும் தனி அழகு வாய்ந்தது. இவர் குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விவசாயப் பகுதி

மலாய் நாட்டில் மிளகாய் பயிரிடும் விதம்.

தற்காலம் இந்தியர்கள் வைத்திருக்கும் சிறு துண்டு நிலங்களில் ரப்பர் வருமானம் குறைவா யிருப்பதால் உணவுப் பொருள்களிலொன்முகிய மிளகாயை விருத்தி செய்தால் அதிகப் பலனைத் தரும். கோலாப் பிலாவில் ஓர் யாழ்ப்பாணி தமது 50 ஏக்கர் நிலத்தில் மிளகாய் நட்டதில் முதற்றடவை பறித்த காய்கள் பதப்படுத்திய பின்னர் 100-பீக்கல் நிறை யிருந்ததாகக் கேள்வப்பட்டோம். அதன் விலை இப்போது உள்ள சந்தைப் பருவப்படிக்கு 2000 டாலர் ஆகின்றது. மற்றத் தடவையிலும் எடுக்கப் போகும் பழங்களையும் சேர்த்தால் அதுவும் 60-ஏக்கர் நிலத்தில் அகப்படும் போது 3000 டாலர் வருமானம் உண்டாகிறது. வருமானம் எவ்வாறு யிருந்தாலும் இந்தியாவை இப்பொருளுக்காக எதிர் பார்க்க வேண்டியதில்லை. மிளகாய் ஓர் கானற்பயிராதல் பற்றிச்சதுப்பு நிலங்களில் வளர மாட்டாது. மலையோரங்களில் இலகுவாய் மழையில்லாத காலத்தில் தண்ணீர் இறைத்து ஊற்றக்கூடிய இடங்களே தகுதியானவை. விவசாயத்தையே பெருந்தொழிலாகக் கையாண்டு வந்த நம்தமிழ் மக்கள் இக்காலத்தில் அதைக் கைசோர விட்டு ஏதோ நவீனத் தொழிலாக நினைத்துத் தொடங்கா திருக்கிருர்கள் போலும். ரப்பர்க் கட்டுப்பாட்டின் பலனாக அநேக கூலிகள் முழு நாளும் வேலை செய்வதில்லை. இவர்களைக்கொண்டு சமீபத்திலுள்ள நிலங்களில் மிளகாய் பயிரிடுதல் மிகவும் நன்று. கூலிகள் பெரு விலை கொடுத்து இந்தியா மிளகாயை வாங்குகின்ருர்கள். இங்கு செய்யப்படும் மிளகாய் மலிவாக விற்கப்படலாம்.

பயிரிடும் முறை.

மிளகாயை மேடை போட்டுக் கன்றுகளை எடுத்துக் குறித்த இடங்களில் நடுமுன்னர் இடமானது நன்ருய்ப் பண்படுத்தியிருக்க வேண்டும். நிலத்தை ஆழமாகக் கொத்தி எருப்போட்டுப் பஞ்சு போல் மேன்மை யாக்கி நட்ட பின் தண்ணீர் தங்கி நிற்கக் கூடிய விதமாய் நான்குபக்கமும் சுற்றிவரக் குழியாய்ச் செய்திருக்க வேண்டும். எவ்வளவு தூரம் நிலம் மேன்மையாக இருக்கின்றதோ அவ்வளவு தூரம் வேர்கள் பரந்து ஓடி அதிகக் காய்களைக் காய்க்கும். சீனர்கள் மிளகாய் நடுகிருர்கள். அவர்கள் வரப்பு போல மண்ணை யுயர்த்திப்பந்த வரம்பின் மேல் நடுகிருர்கள். இரு பக்கங்களிலும் தண்ணீர் மழை நேரத்தில் தங்கி நின்று வரம்பு போல உயர்ந்த பாகத்திற்கு ஊறிக் கொண்டிருக்கும். அதனல் செடிக்குக் கெடுதி நேரிடுவதில்லை. இவ்விதமாக இந்த ஊர்களில் செய்ததாலும் முன் சொன்னவிதமாய் நடப்படும் செடியைப் போல திறமாகக் காய்க்க மாட்டாது. ஆனல் மழை எப்படிப் பெய்தாலும் செடிக்கு பழுது வராது. நாலுபக்கமும் கோலிப்பள்ளமாக நடப்படும் இடத்தில் தண்ணீர் தங்கி நின்று செடியைக் குளிரச் செய்யுமாஞல் இலைகள் உதிர்வதோடு காய்ப்பும் நின்று போம்,

எந்த வழியிலும் அதிக ஜலம் படாமல் அளவுப்படி விடவேண்டும். இந்த முயற்சி ஆரம்பத்தில் வெகு கஷ்டமாகவே தோற்றும். மிள காயினால் வருவாயைச் சம்பாதிக்க விரும்பினால் நிலம் செவ்வையாகப் பண்படுத்த வேண்டும். கை வேலையே இதற்கு இன்றியமையாதது. சிலர் கூலிகளை யேற்படுத்தி இவ்விதம் செய்ய வேண்டு மென்று சொல்லி வேறு வேலைக்குச் செல்கிறார்கள். இவ்வேலை அப்படி யெல்லாம் சொல்லிப் போனால் நன்மை யளிக்க மாட்டாது. நாம் மேடை கவனித்து அவர்களுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டும். கூலிகள் மேற் பார்வைக்கு மாத்திரம் வடிவாய்ச் சுத்தம் செய்து விட்டுக் கீழே யிருப்பது எப்படியானாலு மென்ன வென்று நடந்து கொள்வார்கள். இதற்காக ஒருவர் அல்லது இருவர் பிரத்தியேக மாய் நேரில் நின்று கவனித்து வர வேண்டும்.

பட்ட பாட்டுக்குப் பல னுண்டு.

இந்தத் தொழிலில் நேரும் கஷ்டமும் நஷ்டமும் அதிகம். ஆனால் அதற்குத் தகுந்த லாபமும் உண்டு. மிளகாய்ப் பழங்கள் இந்த நாடுகளில் இந்தியாவைப் போல் தானே வதங்கி வாடிக் காய்ந்து உலர்வதில்லை. செடியிலிருந்து பறித்த மறுநாளே அழுகத் தொடங் கும். ஏராளமான ஜலத் தன்மை இருப்பதால் குடல் அழுகுவதோடு முழுதும் அழுகிப் போகின்றது. இதைப் பதப் படுத்தல் அவசியம். செடிகளிலிருந்து பறித்தவுடன் பெரிய அடுப்புகள் கட்டித் தயாரா யிருக்கும் இடத்துக்கு எடுத்துச் சென்று அதிலே பரப்பி விடவேண் டும். இரண்டடி உயரத்தில் போதிய அளவு நீளம் அகலமாக விருப் பத்தின்படி இரும்புத் தகடுகள் போட்டு அவ்விரும்புத் தகடு இரண்டு அல்லது இரண்டரை இஞ்சு உயரமுடையதாய் நான்கு விளிம்பும் இருக்க வேண்டியது. இதில் ஒரு இஞ்சு கனத்துக்குக் குறையாமல் மணல் போட்டுக் கீழே நெருப்பிட் டெரிக்க வேண்டும். மணல் நன் றாய்ச் சூடு ஏறும் வரைக்கும் எரித்து அந்தச் சுடு மணலிலே மிள காய்ப் பழங்களைக் கொட்டி கலந்து விட்டால் அதிலுள்ள ஈரம்வற்றி உலர்ந்த சருகு போல் காய்ந்து போகும். அடுப்புகள் வேண்டிய அள வுக்குச் செய்து கொள்ளலாம். இந்தியாவைப் போல் வெயிலில் உலர்த்த முடியாது. பகலில் ஒருவாறு திறமாய்க் காய்ந்தாலும் இர விலே உண்டாகும் குளிரினால் பகல் முற்றும் காய்ந்த நீரை மீண்டும் இழுத்துக் கொள்ளும். ஆனது பற்றிப் புகையிலையைப் போலவே இதுவும் பதமாக்கும் ஒரு வஸ்துவாகக் கொண்டு நடத்த வேண்டும். இதுபோல் மற்றும் மல்லி, சீரகம் இவைகளையும் சாகுபடி செய்யின் அதிக நன்மை பயக்கும்.

நம்பிக்கையான உயர்ந்த

பாக்கெட் லீவர் கெடியாரம்

ரூ. 3-12-0 **ரூ. 3-12-0**

ஒரு வருஷம் உத்தரவாதம்.

ஐந்து வருஷங்களுக்குமேல் உழைக்கக் கூடிய உறுதியான இக்கெடியாரத்தை யிந்த சமயம் வாங்கத்தவருதீர்கள். லீவர் கெடியாரம்; பின்புறம் கண்ணுடியுள்ளது, முன்புறம் தடித்த கண்ணுடி யுள்ளது, 17" ஸைஸ் எனாமல் டைல், ஒரு சிறிய அழகிய பெட்டியில்வைத்து அனுப்பப் படுகிறது. கடியாரத்துடன் எங்கள் உத்தரவாதம் எழுதியனுப்பப் படுகிறது. விலை ரூ. 3-12-0 தான் என்பதைக்கவனிக்கவும். இன்றே எழுதுங்கள்.

ஜலால் அன் சன்ஸ்,
பெயர் பெற்ற கடியார வியாபாரிகள்,
61, ராட்டன் டஜார், சென்னை.

ஆந்திரா ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடேட்.,

(டாக்டர். ஏ. லக்ஷ்மீபதி பி. ஏ. எம். பி. ஸி. எம்.
பிஷக் ரத்ன அவர்களால் ஸ்தாபிக்கப் பட்டது.)

ஸ்தம்பனவடி : (Specific for Spermatorrhoea)

ஒரு புட்டி சாப்பிட்டால் ஜீரண சக்தியையும் தேக பலத்தையும் தாது புஷ்டியையும் கொடுக்கும். மூன்று நாட்களில் சக்கிலஸ் கலிதத்தைப் போக்கி விடும் 25 மாத்திரை ரூ. 2-0-0.

ஸ்வாசகுடாரி : (Specific for Asthma and Tuberculosis)

ஸ்வாஸகுடாரி (ஆஸ்த்மா) லேகியமும் சித்தபஸ்டமும் 25 நாள் மருந்து ரூ. 8. ஷை பத்து நாள் மருந்து ரூ. 4.

இரைப்பு, காசம், க்ஷயம், பலஹீனம் முதலியவைகளை வேருடன் தொலைத்து மறுபடியும் வராமற் செய்யும். குணமில்லையென்று ருஜூப்படுத்துவோருக்குப் பணம் வாபீஸ் செய்யப்படும்.

Healing by Post வியாதியஸ்தர்கள் தங்கள் வியாதிகளுடைய குணவிசேஷங்களைத் தெரியப்படுத்தினால் தகுதியான மருந்தைத் தபால் மூலமாக அனுப்பி சௌக்கியப்படுத்தப் படும். கேட்லாக் இனும்.

வைத்தியபதி கோட்டா ஜேயராம் நாயுடு,
ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடேட், 159, பிராட்வே, மதராஸ்.

ஒவ்வொரு
குடும்பத்திற்கும்
இன்றியமையாத
பொக்கிஷம்.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

மின்சார ரசம்
கையிலிருந்து
விட்டால் வேறு
மருந்தே
தேவை இராது.

மின்சார ரசம்

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. மின்சார ரசம் செய்வதில் உபயோகப் படுத்தப் பட்டுள்ள சரக்குகளுக்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தி யுண்டு. இதில் பாஷாண சம்பந்தமான சரக்குகள் கிடையாது. பத்தியமில்லை. அனுபானமில்லை. உள்ளுக்கும் மேலுக்கும் துளிக் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

சகலவித ஜுரங்கள், தலைவலி, ஜலதோஷம், இருமல், அஜீரணம் புளியேப்பம், வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு, பல்வலி, பல்லரணை, வாய் நாற்றம், கைகால் பிடிப்பு, வாயுவு தொந்தரவுகள், வாத ரோகங்கள், காலரா, பிளேக், ஜன்னி, ஸ்திரீ ரோகங்கள், குழந்தை வியாதிகள் இவைகளுக்கு மின்சார ரசம் கைகண்ட மருந்தென்பது தினந்தோறும் ஆயிரக் கணக்காய் தேச மெங்கும் உபயோகித்து வருபவர்களின் அனுபவமாகும். உண்மை விளங்க ஒரே முறை பரீக்ஷியுங்கள்.

இன்றைக்கே எழுதுங்கள் ! **கேட்லாக் இனாம் ! !**

புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2 தபால் சார்ஜ் வேறு.

எச்சரிக்கை : அசல் மின்சார ரசம் ஒன்றுக்கே மேற்கண்ட டிரேட்மார்க் உள்ளது.

விலாசம் :—

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட்,
சேலம் (S. I.)

F. M S. க்கும் S. S. க்கும் சோல் ஏஜண்டுகள்,
மெஸர்ஸ் :

ஆர். இ. முகம்மது காசிம் & கோ,
கிளாங், பினாங், சிங்கப்பூர்.

இத்தருணம் தவராதீர்கள்

புகழ் பெற்ற ஔஷதங்கள்.		ரூ.	அ.	பை.
குடும்பாஞ்சனம்	...	0	8	0
நரைமயிர் கருக்கும் தைலம்	...	1	0	0
லில்லி-ஆப்-திவாலி	...	1	4	0
பல்பொடி டப்பி 1-க்கு	...	0	2	0
காது நோய்த் தைலம்	...	0	4	0
சிரங்கு சொரி மருந்து	...	0	8	0
ரோமசம்ஹாரி சோப்பு	...	1	4	0
காட்கியூர் என்னும் க்ஷய அரி	...	0	8	0
பரிமள கஸ்தூரி குளிகை	...	0	8	0
ரோம ஹரி	...	0	8	0
சர்வபடை சம்மாரன்	...	0	8	0
பரிமள வாசனை பாக்குப் பொடி	...	0	12	0
சிகப்பு குறிபோடும் இங்கி	...	0	6	0
கர்ப்பூரத் தைலம்	...	0	4	0
கண்வலி மருந்து	...	3	0	0

கேட்லாக் இனம். : : : ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:—குடும்பாஞ்சன் டிப்போ,
பார்க் டவுன், மதராஸ்.

இனம் காலண்டர் இனம்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் நெ. 2-ம் நெ. வெள்ளியிலும், மிச்சம் துப்புரவாக வேலை முடித்த மூராசுகுத்தி, கெங்காதரக் கொடி, கைக் கோர்வை, முகப்புக் கொடி, காஞ்சி அரை ஞாண் கொடி, கால் தண்டை, கொலுசு, வகைகளும்; கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேஷன் சிகப்பு, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரங்கள் இன்னும் இதர வெள்ளி தங்க நகைகளும் பட்டு, பருத்தி முதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் கேட்டலாக்கு அனுப்புகிறோம். சுபம்.

தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்,
சராப் ஜவுளி வியாபாரம் குகை, சேலம்,
தென்-இந்தியா.

"லக்ஷ்மி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ஜர்மன் மேட்

ஆபீஸ் காலண்டர் கிளாக்

விலை ரூபாய் 5-8-0



இந்தக் கிளாக்கில் பிரதிதினமும் நாள், தேதி, மாதம் சூரிய வெப்பத்தினால் உண்டாகும் உஷ்ணம் இவைகளை வெகு சுலுவாகக் கண்டு கொள்ளத் தர்மா மிட்டர் என்னும் கருவியும் இருக்கிறது. இது ஒன்று இருந்தால் எல்லா விஷயங் களுக்கும் நன்மை. இதில் மேற் சொன்ன விஷயங்களும் இந்தப் படத் தில் காட்டிய படியும் இல்லா விட்டால் பணம் வாபீஸ் செய்யப் படும்.

7 கல் வைத்த இமிட்டேஷன் வைரக் கம்மல்

ஜதை 1-க்கு பெட்டியுடன் ரூ. 2-8-0



இந்தக் கம்மல்கள் பார்ப்பவர்கள் 500 ரூபாய் மதிக்கும் படியாயும் அசல் வைர மென்றே சொல்லு வார்கள். இதை தனவந்தர் முதல் ஏழை வரையில் அணிந்து கொள் ளலாம்

இன்னும்

7 கல் இமிட்டேஷன் சிகப்பு கம்மல் ஜதை 1-க்கு	ரூ. 2—8
7 கல் இமிட்டேஷன் வெள்ளைக் கடுக்கன் ஜதை 1-க்கு	ரூ. 2—0
எலக்டிரிக் தங்ககில்ட் பூவளையல்கள் 4-க்கு	ரூ. 2—8
இமிடேஷன் வெள்ளை வைர அட்டிகை பதக்கத்துடன்	ரூ.10—0
இமிட்டேஷன் வெள்ளை வைர மோதிரம் 1-க்கு	ரூ. 1—8
எலக்டிரிக் தங்ககில்ட் அரை காசு மாலை 1-க்கு	ரூ. 7—0
எலக்டிரிக் தங்ககில்ட் கால் காசுமாலை 1-க்கு	ரூ. 5—8

பினங்கு சிங்கப்பூரி லிருந்து ஆர்டர் செய்கிறவர்கள் முன் பணம் அனுப்ப வேண்டும்.

கெ. என். ஆர். பிரதர்ஸ்,

164, சைனு பஜார் ரோட், சென்னை.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர் : பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிர்ப் பெற்றுப் பொற்படைவதற்காகப் பாடுபட்டுவரும் பத்திரிகை. பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் வாரந்தோறும் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். செந்தமிழ்ப் பாடல்களும், சித்திரப் படங்களும் வெளி வரும். உலகத்தில் அறநெறியும், அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங் காலமாக உழைத்து வருகிறது.

வருஷ சந்தா ரூ. 4. வெளி நாட்டுக்கு ரூ. 6.

மாதிரிப் பிரதி இனாம்.

“ காரியஸ்தர் ”

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை,

சென்னை.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும்
செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு
எழுதவும்.

மானேஜர்:—வேஸ்ட் அண்டு கோ.,
மவுண்ட் ரோடு : : சென்னை.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதனுபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி யென்றும் அதி சிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறுர்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரக்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப விரணம், ருது சூலையினுல் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப் படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3—0—0
சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10—0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

டவுன் நிறம் வாய்ந்த

பட்டணம் பொடி.

இப் பூவுலகெங்கெனும் புகழ் பெற்றோங்கியதும் தங்கமெடல், வெள்ளி மெடல், பரிசு பெற்றதும் ஸ்பெஷல் பொடி என மகுடம் புனைந்ததும், குணம், மணம், நிறம், வாடை, காரம் இவ்வைந்தும் ஒருங்கே அமயப் பெற்றதும், தினசரி நற்சாக்ஷிப் பத்திரங்களால் கொண்டாடக் கூடியதுமான எமது பொடியை ஓர் முறை உபயோகித்து ஆனந்த மடையுங்கள். உங்கள் சிரசிலுள்ள துர் வியாதிகளை போக்கிக் கொள்ள விரும்பு வீர்களாபின் இன்றே K. S. சுகந்த மூக்குத் தூளின் இருப்பிடத்தைக் கவனியுங்கள்.

K. ஸுல்தான் முஹையதீன் சாயபு

பட்டணம் பொடி தொழிற்சாலை,

நெ. 8. அப்பு மேஸ்திரி வீதி, சென்னை.

அ ன் வ ர ஞ் ச ன்

எல்லாவிதமான நோய்களுக்கும் வலிகளுக்கும் அவசியமான மருந்து ஒரு தடவை பரீட்சித்துப் பாருங்கள்.

புட்டி 1-க்கு விலை அணா 6. டஜன் 1க்கு ரூ. 4.

1926 வருஷத்திய யூனிவர்சல் பியான்சி பாக்கட் டைரி 2½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பிக்கப் படும்.

அன்வரஞ்சன் டிப்போ.

112, அம்மன் கோவில் தெரு, ஜி. டி. மதராஸ்.

உனக்கு வேண்டியதும் நீ வேண்டுமென்று தேடிய சாஸ்திரம் இதுவே

ச ரீ ர ம ர் ம ச ா ஸ் தி ர ம்.

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், அவர்களது சரீர அமைப்பும், அவர்களின் நேர்மையான உபயோகங்களும், ரதிமன்மத சிங்கார ரஹஸியங்களும், ஆண், பெண், சிசு உற்பத்தி விவரமும், ஸ்திரிபுருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும் அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகா ரிஷிகள் ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும் விவாகமானவர்களுக்கும், இனிமேல் விவாகம் செய்து கொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல். 64 படங்களுடன் சுமார் 200 பக்கங்களுடைய புஸ்தகம் 1-க்கு ரூ. 1. தபால் செலவு 7 அணா (நான்காம் பதிப்பு).

மாணிக்க விலாசம் பிரஸ், 12, அருணாசல முதலி வீதி, மதராஸ்.

உத்திரவாதமுள்ள

கையில் கட்டும் கடியாரம். தங்கமுலாம் பூசியது. உறுதியான வேலை. பல வருஷங்கள் உழைக்கும். இன்றே ஒரு கடியாரத்திற்கு ஆர்டர் செய்யுங்கள். விலை ரூபா **8-8.**

SANDERSON & CO.,
Post Box No. 156 MADRAS.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

ஸ்திரீகளுக்கு சாதாரணமாயுண்டாகும் கர்ப்பகோசத்திற்கு சம்பந்தப்பட்ட வியாதிகளைத் தீர்த்து, மாதவிடாய் கிரமமாய் ஏற்பட்டு ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற விரும்பும் மாதர்களெல்லாம்,

கர்ப்பாமிருத சூரணம்

சாப்பிட வேண்டும். 10 தோலா மருந்தடங்கிய டப்பி விலை ரூ. **2.**

பிறந்த குழந்தைகளை எவ்வித நோய்களும் வராமல் காப்பாற்றி பலமும் அழகும் வாய்த்திருக்கும்படி செய்ய விரும்பும் ஒவ்வொரு தாயாரும் தங்களுடைய குழந்தைகளுக்கு நமது,

பாலபுஷ்டிகரண வடிகா

என்னும் மருந்தைக் கொடுக்க வேண்டியது. இது குழந்தைகளுக்கு அமிர்தம் போன்ற ஆகாரம்.

120 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூ. **1.**

முழு விபரங்களடங்கிய கிரய ஜாபிதா இனாமாய் அனுப்பப்படும்.

ராஜ வைத்திய நாராயணஜீ கேசவஜீ,
57, சைனாபஜார், மதராஸ்.

ஜூ ஜூ ரெஸ்ட் ஸ்விங் என்ற

குழந்தைகள் ஊஞ்சல்

(பதிவு செய்யப்பட்டது.)

இந்த ஊஞ்சலில் உங்கள் குழந்தை சௌகரியமாயும் சந்தோஷமாயும் கஷ்ட மில்லாமலு மிருக்கும். உங்கள் குழந்தை விழுந்து விடாது. கால் கைகளின் இயக்கத்திற்குத் தாராளமான வசதி யிருக்கிறது. அதனால் ஜீரண சக்திக்கு அனுகூலமுமுண்டு. வேறு பல சௌகரியங்களுமுண்டு. சிறிதாகச் சுருக்கிக் கொள்ளலாம். எந்த இடத்திலும் இஷ்டம் போல் போட்டுக்கொள்ளலாம். நூறு பவுன் நிறைவரை பொறுக்கக் கூடியது. பிரபல வைத்தியர்களெல்லாம் இதனைப் பாராட்டிக் குழந்தைகளுக்கு இதனைச் சிபார்சு செய்கிறார்கள். இத்தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல வகைப்பட்ட மனிதர்களும் இதனைத் தங்கள் குழந்தைகளுக்கு உபயோகித்து இதன் அருமையைப் பெரிதும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

1. "டாக்டர் க்ளப் என்பவர் எங்கள் குழந்தைக்கு உங்கள் ஊஞ்சலை சிபார்சு செய்தார்" என்று முசோரி வாசியான பாடிகாட் என்பவர் சொல்லுகிறார்.

2. "இன்னும் இரண்டு ஊஞ்சல்கள் எனக்கு அனுப்புங்கள் முதலில் அனுப்பியது எனக்கு மிகவும் மகிழ்ச்சி யளித்திருக்கிறது." என்று டேரா இஸ்மேல்கான் வாசியான காப்டன் பூஷன் ஐ. எம். எஸ். கூறுகின்றார்.

3. "குழந்தை தொட்டிலில் சௌக்கியமாய் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது நான் எவ்வளவோ வேலைகளைச் செய்ய அவகாசம் ஏற்படுகிறது" என்று நாசிக் வாசியான ஸ்ரீமதி தாஸ் அம்மையார் கூறுகின்றார்.

4. "இந்தத் தொட்டில் எனக்கு மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் அளித்திருக்கிறது. அது மிகவும் பயனுள்ளது, ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும்" 'என்று கயா நகரத்து வக்கீலான சையத் அஸ்கார் ஈசூப் கூறுகிறார்.

5. "உங்கள் ஊஞ்சல் கிடைத்தது. அது மிகவும் அழகாயிருக்கிறது. இவ்வளவு பயனுள்ள பொருளை இவ்வளவு குறைந்த விலைக்கு விற்பதுபற்றி நான் உங்களை மெச்சுகிறேன்" என்று லாகூர் பாரிஸ்டரான ஸாகர சந்திரன் கூறுகிறார்.

இந்த ஊஞ்சலை நீங்கள் வாங்கிய பின் அது உங்களுக்குப் பிடிக்காவிட்டால் பணத்தைத் திரும்ப அனுப்பத் தயாராயிருக்கிறோம்.

டீலக்சி என்ற முதல்தரம் ஊஞ்சல் ஒன்றுக்கு 6 ரூ. சாதாரண ஊஞ்சல் 3 ரூபா 12 அணா. தபால் கட்டுக்கூலி வகையரா 12 அணா.

உங்கள் குழந்தைக்கு இந்த ஊஞ்சலை உடனே வரவழையுங்கள். இன்றே உத்தரவு அனுப்புங்கள்.

K. & Keys Co.,

POST BOX No. 32,

Faiz Bazaar, DELHI.

உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் சேவிக்க இனிமையான
பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடைபெறும்.
100-ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone)
போலவே பாடக்கூடிய சிறிய அளவில் செய்யப் பட்ட

மினியேஜர் கிராமபோன்.

ஏ ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற் சாலையில் மாத்திரம் தயாரிக்கப் பட்டது. லண்டன் நகர்வர்த்தகர்களுக்கும் குடும்பஸ்தர்க்கும் ஆயிரக்கணக்காய் செலவிடப் பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற் சாலையி லிருந்தே தருவிக்கப்பட்டது. பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அகஸ்யங்களுடனும் பாட்டுகள் பாடக் கூடியது. கிராமபோன் பெட்டி 1-ம், பலதினுசு பாடும் டபுல் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1ம், செட் 1-க்கு விலை ரூபா 8-8-0 தனி டபுல் சயிட் ரிகார்ட்டு (தட்டு) 1-க்கு ரூ. 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அ. 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாடுகளுக்கு பூராத் தொகையையும் முன்பணமாக அனுப்ப வேண்டும்.

OVERSEAS SWISS WATCH CO.,
P. B. No. 371, MOUNT ROAD, MADRAS.

---

14 ct. Rolled Gold Golden Wristlets Price Rs. 7-4-0.
14 காரட் பொன் கோல்டன் கைக்கெடியாரம் விலை ரூ. 7-4-0.
(5 வருஷ கியாரண்டி கொடுக்கப் படும்.)

**Small size
Pretty
shape.**



அழகான வடிவமுள்ள சிறிய சைஸ் இங்கிலீஷ் மோஸ்தர் ரிஸ்லெட் கெடியாரம்.

இக்கெடியாரத்தில் மணி காட்டும் டைலின் பேரில் பளபளப்பான (பொன்) தங்க நிரம் உள்ளது. எத்தனை வருஷமானாலும் டைலின் பேரில் உள்ள தங்க நிரம் போகாமலே இருக்கும். கெடியாரத்தின் சுற்றியுள்ள பிசிலின் மேல் ஆச்சரியப் படக் கூடிய பலவிதமான விசித்திரப் பட்டைகள் தீர்த்துள்ளது. இருபக்கமும் உள்ள வளையங்கள் இரண்டும் எப்பக்கமும் திருப்பக் கூடிய அழகிய அற்புதமான கில் வளையங்களுள்ளது. இதன் பெருமை வாங்குகிறவர்களுக்குத்தான் தெரியும். இதைப் பார்க்கும் ஒவ்வொருவரும் இதை வாங்காமலிருக்க மாட்டார்கள். கெடியாரம் வெகு காலம் போகும்படி உயர்தர ஸ்விஸ் மேக்கர் சாமான்களால் செய்யப்பட்டது. சரியான காலமும் காட்டக் கூடியது. இதில் பலமாதிரியான தினுசுகள் உண்டு. தங்க டைலும் பொன் கில்ட் விசித்திரப் பட்டைகள் தீர்த்த கில் வளையமுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 1-க்கு ரூபாய் 7-4.

விலாசம்:—ஜெனரல் மெயில் ஆர்டர் கம்பெனி,
தபால் பெட்டி நெம்பர் 232, G P. O, மதராஸ் (வ).

TRADE MARK

நறுமண மிகுந்த வாசனை புகையிலை

பரிமள மிகுந்த வாசனை புகையிலை

சுகந்தமான மனமோகன

காமதேனு மார்க்கு

வாசனை புகையிலை.

நண்பர்களே! திடம் புகையிலையினால் வைத்திய சாஸ்திரத்தை அனுசரித்து, அநேக வாசனைத் திரவியங்களைச் சேர்த்து கைதேர்ந்த வேலைக் காரர்களைக் கொண்டு எங்கள் வாசனை புகையிலையை தயார் செய்து வருகிறோம். ஒரு முறை எங்கள் காமதேனு அடையாளமுள்ள வாசனை புகையிலையை உபயோகம் செய்து பாருங்கள். கண்டத்திற்கு மேற்பட்ட 96 வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது. வெளியூர்களுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்து வருகிறோம். உடனே அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள். மாதிரி அனுப்புகிறோம்.

10 ரூ. எடை கொண்ட அழகிய டின் டஜன் 1-க்கு	ரூ.	2	12	0
5 ,, ,, ,,	,,	1	8	0
2½ ,, ,, ,,	,,	0	12	0
லூஸ் புகையிலை 960 ரூ. எடைமணங்கு 1-க்கு	ரூ.	10	0	0

தவிர ரெம்பவும் கியாதி பெற்ற எங்கள் கஜலட்சுமி மார்க் சேமியாவை உபயோகம் செய்து பாருங்கள். ரெம்பவும் திடம் சரக்காகவும் விலை சரசமாகவும் தருகிறோம். உடனே எழுதுங்கள்.”

N. B. வியாபாரிகளுக்கு டஜன் 1-க்கு 3 டின் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் தேவை.

மானேஜர் :—

காமதேனு விலாச ஸ்டோர்ஸ்,

திருப்பூர்.

FRENCH LEELA OIL

SECRET LOVER'S JOY

(To Be Used Externally)

It is Impossible to describe its secret power. By its use weak and old are able to enjoy the worldly pleasure. Wonderful and Magical effect produced by simple application.

Price Rs. 2 a Phial Post Free.

M. SUNDARAM & Co.,

6, Nambulier St. Sowcarpet, MADRAS.

150 ரூபாய் முதல்
500 ரூபாய் வரை
மாதம் சம்பாதிக்கலாம்!
ஏன் கவலைப்படுகிறீர்கள்?

நம் தேச முன்னேற்றத்தைக்கருதி நமது அனுபவ "கைத்தொழில்" முறைகளும், புதிய யோஜனைகளும், யாவருக்கும் இனமாக அனுப்பி வருகிறோம். 1-அணு தபால் முத்திரையுடன் உடனே தங்கள் விலாசத்தை தெரிவியுங்கள். எந்தத் தேசத்து தபால் முத்திரையாயிருந்தாலும் அனுப்பலாம்

புரோபசர் கே. எஸ். வி. நாத், F. I. A. M. Se.
"கைத்தொழில் கல்விச்சாலை"
(டிபாட் 10), சிவகெங்கை. S. I.

"அமிர்த நஸ்யம்"

என்னும் மகுடம் புனைந்த சுகாதார சுகந்த பரிமள மூக்குத்தூள், ஜலதோஷம் பீனிசம் ஒற்றைதலை நோய்,மண்டைகுத்தல், கண்எரிச்சல், முதலிய உபத்திரவங்களை கண்டிப்பதுடன் சதா உபயோகித்து வருவதால் மேற்கண்ட நோய்களைச் சேரவிடாது. ஒரு சிட்டிகை தூளை எடுத்துக் காலணு சாதாப்பொடியில் கலந்து கொண்டால் எல்லாம் பரிமளிக்கும். எல்லாப் பொடிக் கடைகளிலும் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

புட்டி 1-க்கு அணு 0 4 0

N. V. ஷண்முகம் கம்பெனி,
தபால் பெட்டி 555, மதருஸ்.

டிக்—டாக்.

பெயர் பெற்றதும் ஜெர்மனி தேசத்திலிருந்து வரவழைக்கப் பட்டது. சுவற்றில் மாட்டக் கூடிய கடியாரம். மிக்க உயர்ந்தது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக் கூடியது இது ஒன்றே. விலை ரூ. 2-12.

5 வருட உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு கைக் கடியாரம் 11 கல்லிழைத்தது ரூ. 12-8.

பிரிட்ஜ் மூவர் மெண்ட்

3 வருட உத்திரவாத முள்ள, தங்க கிலிட் கையிலணியும் கடியாரம் விலை ரூ. 7.

உயர்ந்த "பீ" டைம் பீஸ் விலை ரூ. 2-4.

படுக்கரையின் அழகிய போட்டோக்கள் டஜன் விலை ரூ. 2-4.

Emarald Watch Co, P. T. Madras.

தமிழ்நாடு அரசு
210354

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	நெ.	விலை ரூ.	11	முதல்	15 வரை.
2	,,	,,	10	,,	11 ,,
3	,,	,,	$8\frac{1}{2}$	,,	10 ,,

கம்பளிச் சட்டை.

முறுக்கு கம்பளி நூலாய் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போர்த்திக் கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, $1\frac{1}{2}$.
உசத்தி ரூ. $3\frac{1}{2}$ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடி தாவளி.

இது அசல் கம்பளியால் நெய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம்	24	இஞ்சு அக.	ரூ. 2		10 முழம்	40	இஞ்சு அக.	ரூ.	7
6 ,,	24	,,	,, $2\frac{1}{2}$		16 ,,	40	,,	,,	12
7 ,,	29	,,	,, 3						
8 ,,	40	,,	,, $5\frac{1}{2}$		18 ,,	40	,,	,,	14

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ் - - காசி.

புருஷன் : என்னடி அது ! நம் ஊரில் மருந்தில்லாமலா, சென்னைக்கு எழுதிவிட்டாய்.

மனைவி : ஆம். எத்தனையோ மருந்துகளை புட்டி புட்டியாய் வாங்கிப் பார்த்தாச்சுது. ஒன்றும் குணமில்லை. அடுத்தாத்து சேஷி ஒற்றத் தலைவலியால் பட்ட பாடு, ஈசனுக்கே தெரியும். ஒரு மருந்துக்கும் குணப்படவில்லை. கடைசியில், குடும்பாஞ்சனம்தான் கேட்டது.

புருஷன்: நல்லது; மருந்துப் புட்டி என்ன விலையாகப் பெற்றாய்?

மனைவி : ஜாஸ்தி ஒன்றுமில்லை. விலை அணா 8 தான். இனி, நம் மாத்தில், ஜல தோஷம், சளி, மண்டையிடி முதலியன ஒன்றும் வராது. உங்கள் சிநேகிதர்களுக்கு விலாசத்தை தெரிவியுங்கள்.

குடும்பாஞ்சன் டிபோ,

பார்க் டவுண், சென்னை.

Printed at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.